விலை சதம் 25. தொலை பேசி 23411

சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, பங்குனி 26உ (9-4-71) வெள்ளி ஸபர் பிறை 12 புத்தகம் 25 இதழ் 21

'குறைந்தபட்சக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிடின்

# அ.நி. சபையிலிருந்து தமிழரசு வெளியேறும்!'

தமிழ் மொழியின் அந்தஸ்து புதிய அரசியல் திட்டத்தில் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமரிடம் கோரியிருக்கிறோம். அக் கோரிக்கை புறக்கணிக்கப் பட்டால் நாங்கள் தொடர்ந்து அரசியல் நிர்ணய சபையில் இருப்பதில் பயனில்லை. எமது குறைந்த பட்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அராலி வடக்கில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''தமிழினத்தை அழித்து விடுவதற்கான முயற்சிகள் இன்று அதி தீவிரமாக நடப்பதால் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு நின்று அந்த ஆபத்தை தவிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இது அவர்களின் முக்கிய கடமையாகும்.''

# சிவலிங்கத்துக்கு அமைச்சர் முன்னிலையில் அடி!

பளார் பளாரென விழுந்தது சோசலிச அடி! வாங்கிக் கட்டினாராம் சிவலிங்கம்! இந்தப் பரிதாப நிகழ்ச்சி அண்மையில் ஓர் அமைச்சர் முன்னிலையில் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

சிவலிங்கத்துக்கு இப்படிக் 'கைகளால்' சோசலிச பாடம் கற்றுக்கொடுத்தவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் என்றும் சொல்லப்படுகிறது.

மலையகத்தைச் சேர்ந்தவரான இந்தச் சிவலிங்கம் என்பவர் ஆளுங்கட்சியின் காலை நக்கிவரும் ஒரு ஈனப்பிறவி யென்பது குறிப்பிடத்தக்கது.

மாற்றான் காலை நக்கிவரும் இந்த மானங்கெட்ட சோசலிசப் பிறவிக்கும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு சிங்கள் எம். பீக்கும் அண்மையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதாம். இது பற்றி அமைச்சரிடம் முறையீடு செய்வதற்கு இந்த சோசலிச லிங்கம் சென்றிருந்தபோது அங்கு வந்த குறிப்பிட்ட சிங்கள எம். பீ. தனது ஆத்திரம் தீருமட்டும் இவரை வெளு வெளுவென்று வெளுத்துக் கட்டினாராம்.

இந்தப் பரிதாபத்துக்குரிய லிங்கம் சோசலிசத்தின் 'சுவையை' ரசித்தபடியே அங்கிருந்து வெளியேறியதாம்.

## மொழிக் கொள்கை மூன்று விதம்!

'இந்த அரசாங்கத்தின் மூன்று அமைச்சர்கள் மொழிக் கொள்கை பற்றி மூன்று விதமாகப் பேசியுள்ளனர்.

ஆங்கிலம் கைவிடப்படும் — அதனிடம் தமிழுக்கு தரப்படும் என்று அமைச்சர் குமாரசூரியர்

(2-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரத் தமிழரசுக்காக தொடர்ந்து போரிடுவோம்!

## வங்காள மக்களுக்கு ஆதரவு! தமிழரசுக் கட்சி செயற்குழு தீர்மானம்!

'அரசியல் நிர்ணயசபையில் சமஷ்டி பற்றிய எமது தீர்மானம் நிராகரிக்கப்பட்டபோதிலும், அடுத்த அரசியல் அமைப்புத் திட்டம் சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொள்ளாது விடினும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைப் பரசுக்குட்பட்ட தன்னாட்சித்தமிழரசை நிறுவுவது என்ற இலட்சியத்துக்காக தீவிரமாக தொடர்ந்து போராடுவது என்று தமிழரசுக் கட்சி உறுதிபூண்டுள்ளது'.

—மேற்கண்ட தீர்மானம் சென்ற வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சமஷ்டித் திருத்தம் பற்றிய பிரேரணை அ. நி. சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, பெயர் சொல்லி வாக்கெடுக்கும்படி கேட்காவிட்டாலும், திருத்தத்துக்கு சார்பாகவும் ஒற்றையாட்சிக்கு விரோதமாகவும் தாம் வாக்களித்ததாக கட்சிப் பாராளுமன்றக்குழு கூறிய விளக்கத்தை செயற்குழு ஏற்றுக்கொண்டது:

செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:—

(1) தன்னாட்சி பெறும் நோக்கோடு மொழியுணர்வால் ஒன்றுபட்டு வங்காள மக்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டத்துக்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது பூரண ஆதரவை தெரிவித்துக் கொள்ளுகிறது.

(2) தமது விடுதலைக்காக போராடும் வங்காள மக்களை பாகிஸ்தானிய இராணுவம் கொன்று குவிப்பதைக் கண்டித்து உலகநாடுகள் அனைத்தும் நடவடிக்கை யெடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி அனைத்து நாடுகளையும் கேட்டுக் கொள்ளுகிறது:

(3) இலங்கை அரசு துன்புறும் வங்காள மக்களுக்கு தனது ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிக்க வேண்டுமென்றும் பாகிஸ்தான் தனது வெறியாட்டத்தை நிறுத்தும்வரை இலங்கை அரசு பாகிஸ்தான் விமானங்களும் கப்பல்

(2-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் நிர்ணய சபையில் வல்வை மாநாட்டுத் திருத்தங்கள்!

வல்வை ஒற்றுமை மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்பது குறைந்த பட்ச கோரிக்கைகளும் ஒன்பது பிரேரணைகளாக அரசியலமைப்புச் சபையின் 14வது ஒழுங்குப்பத்திரத்தில் உடுப்பிட்டி பா.உ. திரு. க. ஜெயக்கொடியின் பெயரில் இடம் பெற்றிருக்கின்றன:

இந்த ஒன்பது பிரேரணைகளையும் உள்ளடக்கி தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அடிப்படைத்தீர்மானங்களுக்கு கொண்டு வரும் திருத்தங்களும் இந்த ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெற்றுள்ளன:

## பல்கலைக்கழக பல்டி அம்பலம்!

தமிழ்ப்பல்கலைக்கழகம் இதோ வருகிறது; பிரதமர் அத்திவாரக்கல் நாட்டவருகிறார் என்று தமிழ் மக்களுக்கு இது நாள் வரை கண்ணாமூச்சி காட்டிவந்தனர் அமைச்சர் குமாரசூரியரும், ஆளுங்கட்சியின் தமிழ்ப்பகுதி அடிமைகளும். இதற்கு ஒத்தூதி வந்தன இந்நாட்டுத் தினசரிகள்;

ஆனால், இவ்வாரம் நாடாளு மன்றத்தில், பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் முடிவுக்கு பின்னர்தான் பல்

(11-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக்கட்சியினர் தாக்கப்படுகிறார்கள்!

## தர்மலிங்கம் கண்டனம்!

'பலாத்காரத்தினால் அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுவதை தமிழரசுக்கட்சி விரும்பாது: அப்படியான செயல்களுக்கு ஆதரவும் கொடுக்காது. அரசாங்கத்தைக் கவிழ்க்க சிலர் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அப்படியான நடவடிக்கைகளை முறியடிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்போம்' ஆனால் அவசரகால நிலையை அப்பாவி மக்களை துன்புறுத்த உபயோகிக்கக்கூடாது.

''கோண்டாவிலில் ரயில் பெட்டி ஒன்று எரிந்ததைத் தொடர்ந்து இப்பகுதியில் வாழும் மக்களுக்கு பொலிசாரும் இராணுவத்தினரும்

(2-ம் பக்கம் பார்க்க)

# திரியாயில் தமிழர் நிலம் பறிபோகிறது!

திருகோணமலைத்தொகுதியிலுள்ள திரியாய் கிராமத்தில் 1947-ம் ஆண்டு அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளை ''திரியாய் செற்றில்மென்ற் திட்டம்'' என்ற போர்வையின்கீழ் இங்குள்ள பௌத்த விகாரைக்குரிய பகுதியுடன் சேர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இக்காணியில் இங்குள்ள தமிழர்களுக்கு உரிமையிருந்தால் மூன்று மாதத்துக்குள் உரிமை கோரும்படியும் அரசாங்கம் அறிவித்தல் கொடுத்துள்ளது.

இந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தடுத்து இங்கு நிரந்தரமாக உள்ள தமிழர்களுக்கு சுபீட்சமான வாழ்வைப்பெற நடவடிக்கை எடுக்குமாறு திரியாய் த. வா. முன்னணி செயலாளர் பொ. யோகராசா தந்தை செல்வாவுக்கும். திருமலைப் பா. உ. அவர்கட்கும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்:

(2-ம் பக்கம் பார்க்க)

'மப்பு மந்தாரம் உடைய நாள் மோசமான நாளன்று. மேலாம் செயலில் ஈடுபடாது கழிந்த நாளே மோசமானது.'

—தர்மசக்கரம்

காலம் பெறுமதியானது: காலத்தை வீணாக்காதீர்கள் மில்க் வைற் சலவைப்பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப் படுத்துங்கள். பாவித்த உறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்:

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மௌனம் கலையட்டும் !

அநீதி, அக்கிரமம், ஆக்கிரமிப்பு, இனக்கொலை எங்கு நடந்தாலும் அவை வன்மையாகக் கண்டிக்கப் படவேண்டியவை. மனிதாபிமானமும், அறத்தின்பால் நம்பிக்கையும் கொண்ட எவனும் இவற்றைக் கண்டித்திடவே செய்வான்.

இன்று கிழக்கு பாகிஸ்தான் என்று அழைக்கப்படும் வங்காள தேசத்தின் மீது பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி நடத்தும் கண்மூடித்தனமான — மிலேச்சத்தனமான காட்டுத்தர்பார் கண்டு உலக நாடுகளனைத்தும் கொதிப்படைந்து போயிருக்கின்றன.

நல்லவர்கள் உள்ளமெல்லாம் பாகிஸ்தான் ஜனாதிபதியின் மிருகத்தனமான கொடுங்கோலாட்சியை சபித்துக் கொண்டிருக்கின்றன.

வங்காள மக்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே வெறிபிடித்த பாகிஸ்தானிய இராணுவத்தினரால் நாய்கள்போல சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்!

இலட்சக் கணக்கான வங்காளிகள் இதுவரை படுகொலை செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

'இனக் கொலை' பகிரங்கமாக நடக்கிறது வங்காள தேசத்தில்; இந்த அனுச்சரத்தை—அட்டூழியத்தை 'சிறப்புடன்' செய்து கொண்டிருக்கிறது பாகிஸ்தானிய அரசாங்கம்!

இத்தனைக்கும் வங்காளிகள் கேட்டதென்ன?

தங்கள் மொழிக்கு, தங்கள் இனத்துக்கு, தங்கள் நாட்டுக்கு விடுதலை கேட்டார்கள்; தமக்கென தன்னாட்சி கேட்டார்கள். தன்னாட்சிக் கோரிக்கையை பாகிஸ்தான் ஜனாதிபதி தட்டிக் கழிக்கவே தனியாட்சி — தனிநாடு அமைத்துக்கொள்ளப் போவதாக அறிவித்தார்கள்.

இதன் எதிரொலியாகத்தான் வங்காளிகளின் வீரசுதந்திர உணர்ச்சியை-விடுதலைப்போராட்டத்தை நசுக்கபாகிஸ்தான் அரசு தனது இராணுவத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது வங்காள தேசத்தின் மீது!

தமது விடுதலைக்காக மெய்சிலிர்த்திடவைக்கும் எண்ணரிய தியாகங்களைச் செய்து உரிமைப்போர் நிகழ்த்திக்கொண்டிருக்கும் கிழக்கு வங்காள மக்களுக்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது பூரண ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்குத்தான் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்னொருவனின் உணர்ச்சியும் உள்ளக் குமுறலும் புரியும். ஈழத்தில் நசுக்கப்படும் தமிழினத்தின் விடுதலைக்காக போராடிவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, வங்காளிகளின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பது பூற்றும் உணர்ச்சி பூர்வமானதொன்றாகும்.

கிழக்கு வங்காளிகளின்மீது பாகிஸ்தான் நடத்தும் வெறித்தாக்குதல்களை நிறுத்தும்வரை இலங்கையினூடாக பாகிஸ்தான் விமானங்கள் செல்வதற்கு தடைவிதிக்க வேண்டுமென்றும் இஸ்லாமாபாத்திலிருந்து இலங்கைத் தூதரை வாபஸ்பெற வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சி அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருக்கிறது!

ஆனால், கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் இக்கோர இனக்கொலையை கண்டும் அதுபற்றிக்கண்டிக்க—அது பற்றி கடுமையான நடவடிக்கைகளையெடுக்க — இலங்கை அரசு தயங்குகிறதே அது ஏன்?

இலங்கை அரசுமட்டுமா? இலங்கையில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த வேறு எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க முன்வந்ததாக தெரியவில்லை!

வியட்னும் பிரச்சினைக்காக வாதாடுபவர்கள்—மைலாய் படுகொலையை எதிர்த்து குரலெழுப்புபவர்கள்—லாவோஸ் பிரச்சினையை விமர்சிப்பவர்கள்—தென் ஆபிரிக்க கறுப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு நல்குபவர்கள்—இஸ்ரேல் ஆக்கிரமிப்பை கண்டிப்பவர்கள்—கண்ணுக்கு முன்னே கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் நடத்தும் படுகொலை கண்டும் மௌனம் சாதிப்பதேன்?

கூட்டணி ஆட்சியினரும், இலங்கையிலுள்ள ஏனைய அரசியற் கட்சியினரும் தம் நெஞ்சைத்தொட்டு இதற்கு பதில் சொல்லட்டும்!

வங்காளிகளின் விடுதலைப்போராட்டத்துக்கு துணிச்சலாக ஆதரவு தரவிடாமல் உங்கள் மனச்சாட்சியே உங்களைக் குத்திக்குடைகிறதா? இலங்கை வாழ் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்க மறுக்கும் நாம் வங்காளிகளின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு எப்படி ஆதரவுதருவது என்று உங்கள் உள்ளமே உங்களை கேட்டுத்தொல்லைப்படுத்துகிறதா?

அல்லது;

இந்திய அரசு வங்காளிகளின் விடுதலைப்போராட்டத்தை ஆதரிக்கும்போது அதை நாங்களும் எப்படி ஆதரிப்பது என்ற வழமையாக உங்களுக்குள்ள குறுகிய—இந்திய விரோத மனப்பான்மையால் அவதிப்படுகிறீர்களா?

எப்படியோ போகட்டும்! இனியாவது இலங்கை அரசின் மௌனம் கலையட்டும்!

வங்காளிகளின் விடுதலைப்போராட்டத்துக்கு இலங்கை அரசு தனது பூரண ஆதரவைத் தெரிவிப்பதுடன் மேற்கு பாகிஸ்தான் நடத்தும் இனக்கொலையை எதிர்த்து ஐ. நா. சபை மூலம் கடும் நடவடிக்கை யெடுக்கவும் முன்வர [illegible] மென்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் [illegible] கேட்டுக்கொள்ளுகிறோம்.

# ஒற்றையாட்சியை ஒழிக்கும்வரை தமிழினம் ஓயப்போவதில்லை!

## மக்கள் குரல்

இலங்கையை ஒரு சமஷ்டி குடியரசாக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசியல் நிர்ணய சபையினால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. சமஷ்டி கோரிக்கை அரசியல் நிர்ணய சபையினால் தோற்கடிக்கப்பட்டாலும், தமிழ் மக்கள் அக் கோரிக்கையை கைவிடப் போவதில்லை. இலங்கை ஒரு ஸ்ரீ லங்கா ஒற்றையாட்சி குடியரசாக விளங்க வேண்டுமென்ற தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடாமலே நிறைவேற்றி விட்டார்கள். இதன் மூலம் தமிழ் மக்களுக்கும் மண் கிள்ளிப் போட்டு விட்டார்கள். அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களின் மூச்சாக இருந்த தமிழரசுக் தமி கட்சியையும் கூடுமானவரை தூற்றிவிட்டார்கள்.

திரு. கொல்வின் ஆர். டி சில்வா அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி என்றும், சென்றதேர்தலில் தெற்கில் எவ்வாறு வகுப்புவாதக் கட்சி ஒழிக்கப்பட்டதோ அதே போல இனி வடக்கிலும் தமிழரசுக்கட்சி ஒழிக்கப்படும் எனவும் கூறினார்.

ஆனால் ஒன்றுமட்டும் திரு. கொல்வின் ஆர். டி சில்வாவுக்கு கூறிவைக்க விரும்புகிறோம். என்னவெனில் உங்களிடம் வேறு ஒரு வகுப்புவாதக் கட்சி இருக்கவேண்டிய அவசியம் இல்லை. உங்கள் கட்சிகளே வகுப்புவாதக் கட்சிகளாக காணப்படுகின்றது. அதோடு உங்களிடம் அரசாட்சி இருக்கின்றது, அதிகாரம் இருக்கின்றது. நீங்களே ஆளுகின்றீர்கள். நாங்கள் ஆளப்படுகின்றோம்.

எங்களை ஆளப்படுவதை தகர்த்து எறிந்து எங்களை நாங்களே ஆளப்படும் முறையைத்தான் விரும்புகின்றோம். இதற்காகவே நாங்கள் தமிழரசை அனுப்புகின்றோமே தவிர உங்களை துவேஷிப்பதற்கல்ல, எங்களிடம் சிங்கள மக்களை துவேஷிக்கக்கூடிய ஒரு கட்சி இல்லை என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம்.

தமிழரசுக்கட்சி சிங்கள மக்களுடன் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றே விரும்புகின்றது. தமிழரசுக் கட்சி அண்ணாவின் கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றது.

உங்களுடைய கட்சிகளுக்கு தமிழ் என்றால் கசக்கின்றது. சென்ற மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்த திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் போது அது ஒரு வகுப்புவாதக்கட்சியாக தோன்றுகின்றதாம். ஆகவே அப்பெயரை உதறித் தள்ளிவிட்டு வேறு பெயர் சூட்டிக்கொண்டு தங்கள் கட்சியில் சேரும்படி வேண்டினாராம்; அதன்படி எங்கள் மும்மூர்த்திகளும் சேர்ந்துவிட்டார்கள். அவர்களுக்கு தமிழ் இனத்தைப் பற்றி எவ்வித யோசனையுமில்லை. தங்களைப்பற்றிய யோசனைதான்.

இந்த முறை [illegible] ஒரு [illegible] தவர்களின் [illegible] அனுதாபத்திற்கு இரங்கி வாக்களிக்க, அவர்கள் தமிழினத்திற்கு வாய்க்கரிசி போடுகிறார்கள். அடுத்த தேர்தலில் அவர்களைப் பார்ப்போம்.

அதிருக்க தமிழ் என்ற பெயரில் கட்சி இருக்கக் கூடாது என்கிறீர்கள்; திரைப்படத்தில் தப்பித் தவறியாதேனும் தமிழைப் பற்றி பாட்டோ, பேச்சோ இருந்தால் அதை தணிக்கை செய்கின்றீர்கள் வானொலியிலும் இது போன்ற செயலைத்தான் செய்கின்றீர்கள். இதிலிருந்து தெரிகின்றதா? யார் துவேஷக்காரனென்று; உங்கள் கட்சிகள் உண்மையான துவேஷமற்ற கட்சி என்றால் பின்பு ஏன் எந்த நாட்டிலும் இப்படியாக நடக்காத தரப்படுத்தல் மூலம் தமிழ் மக்களை புறக்கணிக்கின்றீர்கள். இதுதானா உங்கள் வகுப்புவாதமற்ற கொள்கை?

வடபகுதியில் தமிழ் இராச்சியம் என்று ஒன்று இருக்கவில்லையென்றும், இப்போது தமிழ் மக்கள் தமிழ் அரசு கேட்பது தனக்கு வியப்பாக இருக்கின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. பிரின்ஸ் குணசேகரா அரசியல் அமைப்புச் சபையில் பேசியுள்ளார். தமிழர் வந்தேறு குடிகள் என நீதி அமைச்சரான ஜெயமானே கூறினார்; ஈழத் தமிழகத்தில் தமிழனாகப் பிறந்த திரு. செல்லையா குமாரசூரியர் தமிழர் கலப்பு சாதியென கூறினார்.

இப்படியாக ஒவ்வொருவர் ஒவ்வொரு கண்டுபிடிப்பை கண்டுபிடிக்கிறார்கள். திரு. பிரின்ஸ் குணசேகரா சரித்திரம் படிக்கவில்லை போல் தெரிகின்றது. தமிழ் அரசன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்துள்ளான் என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றது. கடைசியாக கண்டியை ஆட்சிசெய்தஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் ஒரு தமிழன் என்பதை இவர் அறிவாரா? சிங்கள மக்கள் இங்கு குடியேறுவதற்கு முன்பே தமிழ் மக்கள் குடியேறினார்கள், என்பதற்கே பல ஆதாரங்கள் இருக்கின்றன.

திரு: பிரின்ஸ் குணசேகரா மேலும் பேசும்போது சிங்கள மக்கள் சோஷலிஸத்தை நாடிப்போகும்போது தமிழ் மக்கள் பிற்போக்கு முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் கீழ் செல்கின்றார்கள் என கூறினார். திரு: பிரின்ஸ் குணசேகரா அறியவேண்டிய விசயம் என்னவென்றால் சிங்கள மக்கள் இப்போது தான் சோஷலிஸத்தை நாடுகின்றார்கள். ஆனால், கம்யூனிசத் தலைவர்கள் சோஷலிஸத்தை வகுப்பதற்கு முன்பே தமிழ் மக்கள் சோஷலிஸக்கொள்கையை வகுத்துவிட்டார்கள் என்பதற்கு சான்றாக திருக்குறள் விளங்குகின்றது.

எங்கள் தமிழரசுக்கட்சியும் ஒரு உண்மையான சோஷலிஸக் கட்சியென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். உண்மையான சோஷலிஸம் இந்நாட்டில் நிலவுமானால் அதில் தமிழரசுக் கட்சி பங்குபற்றியே தீரும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

— வே. குகானந்தா

## தமிழரசுக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுமை இழைக்கிறார்கள். தமிழரசுக்கட்சி ஆதரவாளர்களை கண்ட கண்ட இடங்களில் தாக்குகிறார்கள். தமிழரசுக் கட்சிக்காரர்களின் வீடுகளை சோதனை செய்கிறார்கள்; அவர்களை அடித்துத் துன்புறுத்துகிறார்கள். யார் தமிழரசுக்கட்சியினரின் பெயர்களையும் விலாசங்களையும் பொலிசாருக்கு கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இந்த அநீதியை, அக்கிரமத்தை கடுமையாகக் கண்டிக்கிறோம். அரசாங்கம் இப்படிச் செய்வது முறையற்றது.

"தமிழரசுக்கட்சிக்கு பலாத்காரத்தில் நம்பிக்கை கிடையாது. அதை ஆதரிக்கவும் மாட்டாது; எமது கட்சி அகிம்சையிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறது. அமைதியான அகிம்சை வழிகளைப் பின்பற்றியே எமது இலட்சியங்களை அடையலாம் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

அகிம்சை அடிப்படையிலேயே நாம் எமது உரிமைகளைக் கோரும் இயக்கங்களை நடத்துவோம். தமிழ்ப்பகுதிகளில் நடைபெறும் பலாத்கார நிகழ்ச்சிகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்." —(5-4-71ல் நாடாளுமன்றத்தில்)

---

## சுதந்திரத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் இறங்குவதற்கு இடம் அளிக்கக் கூடாது என்றும் தமிழரசுக்கட்சி இலங்கை அரசைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாட்டை ஜூன் 5, 6, 7ம் திகதிகளில் கிளிநொச்சியில் நடத்துவது.

---

## மொழிக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார். ஆனால் அது நடக்கவில்லை.

ஆங்கிலம் தெரிந்த தமிழர்களுக்கு ஆங்கிலத்தில் பதில் அனுப்புவதுதான் எமது கொள்கை; இது தவறு என்றால் சட்ட நடவடிக்கை யெடுக்கலாம்; என்று இச்சபையில் உள்நாட்டு அமைச்சர் பீலிக்ஸ் தெரிவித்தார்.

அமைச்சர் இரத்னயகாவோ யாழ்ப்பாணத்தில் பேசுகையில் அரசாங்கம் தமிழ்க் கடிதத்துக்கு தமிழில் பதில் தரும் என்று கூறியிருக்கிறார்.

ஏன் இந்தக்குளறுபடி? இதில் எதுதான் உங்கள் மொழிக்கொள்கை?

—நாடாளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

---

## திரியாயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயமாக திரியாய் கி. சபையின் முன்னாள் 6-ம் வட்டார உறுப்பினர் திரு. க. செல்வராசா அவர்களும் திருமலைப் பா. உ. பா. நேமிநாதன் அவர்கட்கு ஓர் மகஜர் அனுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் இந்நாட்டின் சிறுபான்மை இனமல்ல

# தனிஅரசோச்சி தலைநிமிர்ந்து வாழ்ந்த தனிஇனம்!

## பெரும்பான்மை வாக்குகளால் எடுக்கப்படும் எந்த முடிவும் எங்களைக் கட்டுப்படுத்தாது!

## சமஷ்டியை ஏற்கத் தவறினல் பிரிவினை வளரும்!

### அ. நி. சபையில் கதிரவேலுப்பிள்ளை தெளிவுரை!

## படை.பலத்தால் அடக்கி ஆள்வதுமட்டும் ஆக்கிரமிப்பல்ல; வாக்குப்பலம்கொண்டு அடக்கிஆள்வதும் ஆக்கிரமிப்பே!

இந்த நாட்டிலே போத்துக்கீசர் வந்தபொழுது நாம் வடக்கிலே ஒரு தமிழ் இராச்சியத்தை வைத்திருந்தோம். அந்த தமிழ் இராச்சியத்தின் அரசன் இந்த போத்துக்கீஸருடன் படையெடுப்பதற்காக இந்நாட்டிலே — முக்கியமாக கண்டி நாட்டு அரசனுக்கு— கண்டி மக்களின் தலைவனுக்கு ஒரு கடிதம் எழுதினன். இந்நாட்டை ஒற்றுமைப்படுத்த வேண்டும். எமது நாட்டை எதிர்த்துப் படையெடுத்துவரும் அந்நியரை எதிர்க்க வேண்டுமென்று ஒரு கடிதத்தை எழுதினன். அந்த கடிதத்துக்குக் கண்டி நாட்டிலிருந்து பதில் வரவில்லை. அதற்குப் பதிலாகப் போத்துக்கீஸர் தமிழ் நாட்டுக்கெதிராகப் படையெடுத்து, கைப்பற்றி அதனை ஆண்டார்கள்.

இந்நாட்டுக்கெதிராக அந்நியர் எடுத்த படையெடுப்பினுல் தமிழ் மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடினர்கள். அந்த நேரத்திலே எந்தச் சிங்களத் தலைவர்களும், தலைமைக்காரர்களும் மற்றும் மக்களும் இலங்கை எமது நாடு—இலங்கையிலே அந்நியர் படைகள் வந்து குவிகின்றன; இலங்கை நாட்டை நாங்கள் பாதுகாக்க வேண்டுமென்று முன்வந்தார்களா? தமிழ் மக்களுடன்—தமிழரசனுடன் சேர்ந்து போராடுவதற்கு சிங்கள மக்கள் உதவிக்கு வந்தார்களா? இலங்கை ஒரு நாடு; இலங்கையிலே அந்நிய படைகள் வந்து குவிகின்றன; இலங்கை நாட்டை நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ் மக்களுடைய தமிழ் அரசனுடைய தமிழ் நாட்டினுடைய உதவிக்கு வந்தார்களா? இலங்கையை அப்பொழுது ஒரு நாடென்று நினைத்தார்களா? இலங்கை ஒரு நாடு, ஒரு இனம் என்ற கருத்து அவர்களுக்கு அந்த நேரத்தில் இருந்ததா? இந்தச் சரித்திர அடிப்படையை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

### வெள்ளையன் ஏற்படுத்திய போலி ஒற்றுமை

வெள்ளையர் ஆட்சிதான் இந்த நாட்டை ஒரு நாடாக ஆக்கியது. வெள்ளையர் ஆட்சிதான் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஒரு இன மக்கள் என்று சிந்திக்க வைத்தது. இலங்கை மக்களை தமிழ், சிங்களம் என்றில்லாமல் இலங்கை மக்கள் என்று சிந்திக்க வைத்தது அந்நியர் ஆட்சி; அந்நியர் படையெடுப்பு என்ற உண்மையான விளக்கம் எங்களுடைய மனதில் வந்தால் நாங்கள் எதிர்காலத்திலே இலங்கையர் என்ற கருத்து வளரத்தக்கதான தகுதியான ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கலாம்; வெள்ளையர் தந்துபோன அரசியல் அமைப்பை நீங்கள் உதறித் தள்ளுவதுபோல, அந்த ஒற்றை ஆட்சியையும் ஒரே நிர்வாகத்தையும் நீங்கள் உதறித் தள்ளுவதுபோல நாங்களும் உதறித் தள்ளுகிருேம். இந்த ஒற்றையாட்சி அரசமைப்பு எங்களுக்குப் பொருந்தாது என்று நாங்கள் கடந்த இருபது வருடகாலமாகச் சொல்லி வருகின்ருேம்.


### தனியரசு

ஒரு புதிய அரசியலமைப்பு உருவாக வேண்டும் என்று உங்களுடைய சிந்தனையும் எங்களுடைய சிந்தனையும் ஒன்ருக இருக்கிறது என்பதை நீங்கள் நன்ருகச் சிந்தித்து விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டைப் பிரிப்பதற்காக அல்ல, நாட்டை ஒன்று சேர்ப்பதற்காக நாங்கள் இந்த உரிமையைக் கேட்கிருேம். எந்த நாட்டிலும் இருக்கும் மக்கள் ஒரு இனமாக வாழவேண்டும் என்ருல் அந்த நாட்டில் இருக்கும் பல இனங்களும் அந்த நாட்டில் சுதந்திரம் பெற்ற மக்களாக இருக்க வேண்டும். வெள்ளையர் வரமுன் தமிழ் மக்கள் இந்த நாட்டிலே தனி இனமாக, தனி இராச்சியம் அமைத்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே இயங்கினர்கள். அந்த அடிப்படையை வெள்ளையர் போனபின்னர் மாற்றலாமா? அதை மனதிற்கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் இந்த நாட்டிலே தனி இனமாக தனி இராச்சியம் அமைத்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே இயங்கியதுபோல தமிழ் மக்களும் இந்த நாட்டிலே தனி இனமாக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே இயங்கினர்கள். வெள்ளையர் வந்ததும் போனதும் சரித்திரத்தில் நடந்த விஷயமாக இருந்தாலும் இந்த அடிப்படையை அவர்கள் வந்ததும் போனதும் மாற்ற முடியாது என்ற கருத்தை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும். அப்படி விளங்கிக் கொண்டால்தான் சரித்திர ரீதியாகப் பார்த்தால் என்ன, ஜனநாயக ரீதியாகப் பார்த்தால் என்ன, சோசலிச ரீதியாகப் பார்த்தால் என்ன, இன ஒற்றுமை அரசியல் ரீதியாகப் பார்த்தால் என்ன தமிழ் மக்களும் இந்த நாட்டிலே சுதந்திரம் பெற்ற இனம். சுயநிர்ணய உரிமை பெற்ற இனம், சிங்கள மக்கள்போல அவர்களுக்கும் சம உரிமை இருக்கிறது என்ற அடிப்படையிலே நீங்கள் இணைந்து வாழக்கூடியதாக ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கலாம்:

### 3 ஆண்டுகளுக்குமுன் கண்டியர் கருத்து

இந்தக் கருத்தைச் சிலர் மறுத்து, அடிப்படையை விளங்கிக் கொள்ளாமல் இடைநடுவே இ[illegible]யங்களை எடுத்துக்[illegible]ர்கள். ஒரு பிரதிநிதி சொன்ஞர் 43 வருடங்களாக தமிழ் அரசுக்கட்சி பின் அடைந்த ஒரு கருத்தைச் சொல்லுகிறது என்று. அதாவது இந்த நாட்டிலே வெள்ளையர் வர முன்னும் வந்த பின்னும் கண்டி நாட்டிலே ஒரு தனி இராச்சியம் இருந்தது என்று எல்லோருக்கும் தெரியும்;



கண்டி நாட்டுமக்கள் டொனமூர்க்கொமிசனுக்குமுன்னும் சோல்பரி கொமிசனுக்கு முன்னும் என்ன சொன்ஞர்கள்? அதை அறிய வேண்டும். அதை அறியாமற் பேசுவதில் பயன் இல்லை. இப்பொழுது நான் 1968 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஒன்பதாம் தேதி 'டெயிலி மிறர்' பத்திரிகையிலிருந்து ஒரு செய்தியை வாசிக்கிறேன்.

43 வருடங்களுக்கு முன் அல்ல, மூன்று வருடங்களுக்கு முன்தான். கண்டி மக்களுடைய சிந்தனை மூன்று வருடங்களுக்கு முன் இவ்வாறு இருந்தது:

'Kandyans want a separate kingdom—

The Kandyans are on the war path. They too want a separate kingdom for themselves and wish to have a United States of Ceylon, which, in fact, is federalism.

Thirty Kandyan leaders who met over the week-end decided that they should go all out to have Ceylon divided into three separate States viz: Northern, Kandyan and Ruhuna.

They were, however, averse to using the terms "federal" or "federalism" and preferred to call them separate states.

They were strongly of the view that the country's present linguistic and communal problems could be solved only by the creation of three separate states on these lines.

These Kandyan leaders also refused to place any confidence in the Opposition Leader Mrs. Sirima Bandaranaike who, they fear, is now in the clutches of the Marxists.

At this conference three committees were appointed to devise ways and means for securing a separate state for the Kandyans.

One committee was selected to study the present Constitution and consider how it should be revised to provide for the division of the country into three separate states."

அரசியலமைப்பைத் திருத்துவதற்கு ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும். மேல் சபையையும் இச் சபையையும் சேர்த்து உபகுழு ஒன்று தேசிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. அக்குழுவினர் மக்களுடைய பரிசீலனைக்கும் பதிலுக்குமாக ஒரு கேள்விப் பத்திரத்தை அனுப்பி வைத்தார்கள். அந்தக் கேள்விப் பத்திரத்திற்கு பல பிரமுகர்கள் இந்த நாட்டின் அரசியலமைப்பு சமஷ்டி அரசியலமைப்பாக இருக்க வேண்டும் என்று கண்டி நாட்டிலிருந்து எழுதியனுப்பினர்கள்.

Mr. Bedduwela, Hony. Secretary, Kandyan Youth League, Mr. Lionel Kulatunga, Secretary, Democratic Society of the Kandyan Federated State. திரு பந்துசேன, திரு. திலகரத்ன, திரு. நந்ததேவ என்றவர்களுடைய மறுமொழிகளெல்லாம் அரசியல் சாசனத்தைத் திருத்த நியமிக்கப்பட்ட உபகுழு தயாரித்தனுப்பிய கேள்விகளுக்கு மறுமொழிகளாக வந்திருந்தன; ஆகவே, இந்தப் பிரச்சினை 43 வருடப் பிரச்சனை அல்ல. இப்பொழுது நடக்கிற ஒரு பிரச்சினையாகத்தான் நாங்கள் இதனைக் கருதுகிருேம்; நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை; இந்தத் தத்துவத்தை மட்டும் நாங்கள் விளங்கிக் கொண்டால் போதும்.

### அரசியற் சூழ்நிலை

அரசியல் அமைப்பில் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற ஒரு அமைப்பை ஏற்படுத்துவது அவசியம். இன்று இந்த நாட்டின் அரசியல் சூழ்நிலை என்ன? தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இரண்டு இனங்களாகப் பிரிந்து வாழ்கிருர்கள். இந்த நாடு அரசியல் ரீதியிலே ஒற்றுமைப் படுத்தப்பட்டிருக்கிறதா அல்லது பிரிந்து இருக்கிறதா என்பதை அறிவதற்கு—ஒற்றையாட்சித் திட்டம் நாட்டை ஒற்றுமைப்படுத்தி வைத்திருக்கிறதா, அல்லது பிரித்து வைத்திருக்கிறதா என்பதை அறிவதற்கு அரசியல் வாழ்க்கையிலே என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்தால் போதும். The proof of the pudding is in the eating of it.

இந்த அரசியலமைப்பு, இன்றைய ஒற்றையாட்சி இந்த மக்களை ஒற்றுமைப் படுத்துகின்றதா என்ற கேள்வியைக் கேட்டால் 'இல்லை' என்றே பதில் வரும். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அரசியல் ரீதியில் ஒற்றுமைப் படவில்லையென்பது எங்களுக்கு நன்ருகத் தெரியும். எனவே, இந்நாட்டிலே இருக்கும் அரசியற் பிரச்சினை இதுவாக இருந்தால் அதனை எப்படித் தீர்ப்பது என்று யோசிக்க வேண்டும்.

### தனி இனம்

இந்நாட்டிலே தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் அல்ல. இதனை நன்ருக விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் ஒரு தனி இனம். சிங்கள மக்கள் ஒரு தனி இனமாக இருப்பதே போன்று தமிழ் மக்களும் ஒரு தனி இனமாக இருக்கின்ருர்கள்.

இந்நாட்டிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சேர்ந்து வாழவேண்டுமென்ருல் பஞ்சசீலத்தின் அடிப்படையில்தான் சேர்ந்து வாழலாம். ஒருவருடைய உரிமையை மற்றவர்கள் ஏற்று வாழும் நிலையிலேயே தான் வாழலாம். தமிழ் மக்களுடைய தனித்துவத்தை, தமிழ் மக்கள் இந்நாட்டிலே ஒரு தனி இனம் என்பதை, தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையைச் சிங்கள மக்களும் ஏற்று ஈரினமும் இந்நாட்டிலே சேர்ந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் இங்கு ஒற்றுமையைக் காணலாம். அந்த நோக்கத்தைக் கருத்திற் கொண்டுதான் இந்த அரசியல் நிர்ணயசபையிலே நாங்கள் பங்கு பற்றுகிருேமே ஒழிய சிறுபான்மையினம் என்ற முறையிலே பங்குபற்றவில்லை. ஜனநாயக ரீதியிலே நாங்கள் சிறுபான்மையாக இருந்தால் பெரும்பான்மை வாக்குகள் எங்களைக் கட்டுப்படுத்தும். பெரும்பான்மை வாக்கு கட்டுப்படுத்தும் நிலையில் நாம் இங்கு இல்லை.

### இதுவும் ஆக்கிரமிப்பே

ஓரினத்தை இன்னேர் இனம் தனது வாக்கின் வல்லமையால், தனது வாக்கின் தொகையால் கட்டுப்படுத்தி ஆள முடியாது. அப்படி ஆள நினைப்பது ஓர் ஆக்கிரமிப்புச் செயல் என்றே சொல்ல வேண்டும். படைப்பலத்தால் ஓரினம் இன்னேர் இனத்தை ஆள நினைத்தால் அதனை ஆக்கிரமிப்பு என்று சொல்கிறீர்கள். ஆனல், படைப்பலத்தைப் பாவிக்காமல் வாக்குப் பலத்தைக் கொண்டு ஆள நினைத்தால் அது ஆக்கிரமிப்பில்லையா? அது ஜனநாயகமா—ஓரினம் இன்னேர் இனத்தை ஆள நினைத்தால், ஓரினம் இன்னேரினத்தின் உரிமையை மறுத்தால்—அது படைப்பலத்தால் மறுத்தாலுமோ, அல்லது வாக்குப் பலத்தால் மறுத்தாலுமோ—அது ஆக்கிரமிப்பேயொழிய ஜனநாயகம் அல்ல.

ஆகவே, இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்களும் சிங்கள மக்களும் ஒன்று சேர்ந்து இணைந்து வாழவேண்டுமென்ருல் "நாம் ஒன்று" என்னும் கருத்து வளரவேண்டும். எங்களுக்கு வெள்ளையர் ஆட்சியில் ஒரு நல்ல கருத்துக் கிடைத்தது. "இலங்கை, ஒரு இலங்கை, இலங்கையிலே உள்ள மக்கள் எல்லாம் ஓரினம்" என்ற கருத்தை எங்கள் மத்தியிலே அவர்கள் வைத்துவிட்டுப் போனர்கள் அந்தக் கருத்து வளரவேண்டு

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன் கிளர்ச்சி வெற்றி!

ஆசிரியருக்குக் கடிதம்

## இந்தியாவில் நடந்ததே ஈழத்திலும் நடக்கப் போகிறது

டாக்டர் தி. சே. சௌந்தரராஜன் என்பவர் (1947ல்) எழுதிய ''நினைவு அலைகள்'' என்னும் புத்தகத்தைப்படித்துக் கொண்டிருந்தேன். 1920ம் ஆண்டுக்கு முன் இந்தியத் தேசியக் காங்கிரஸ் எப்படிச் செயல்பட்டது என்று அவர் சொல்லியுள்ள பகுதியைப் படித்ததும், இப்போது (50 ஆண்டுகளுக்குப் பிறகு) ஈழநாட்டுத் தமிழ்க் காங்கிரஸ் மேற்கொண்டுள்ள நடைமுறை என் நினைவுக்கு வந்தது.

''இந்தக் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கவனித்த பிறகு இதனுல் பொதுமக்களுக்கும் தேசத்திற்கும் அதிகநலன் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை; அடிமைப்பட்டிருக்கும் ஒரு கூட்டத்தாருக்கு இன்றியமையாத சிற்சில சங்கடங்களை விளம்பரப்படுத்தவும், அதிகாரவர்க்கத்தினர் மனத்தில் நம் நாட்டினரிடத்துத் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை ஒருவாறு வலியுறுத்தவும் மட்டும் இது பயன்பட்டதாகவே எனக்குத் தோன்றியது. காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்களில் பலர் அரசாங்கத்தாரிடம் பெரிய பதவிகளைப் பெற்றுர்கள். அப்பதவிகளுக்கு அவர்கள் உரியவர்களல்லர் என்று சொல்ல முடியாது. நம் சமூகத்தினரிடையில் நன்மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர்களே காங்கிரஸ் தலைவர்களாக அக்காலத்தில் மதிக்கப்பட்டார்கள். அது மாத்திரம் அல்ல; சர்க்காரிடத்தில் களங்கமற்ற பக்தியும் மதிப்பும் இருந்தவர்கள்தாம் இந்தப்பதவிக்கு விரும்பி எடுக்கப் பட்டார்கள். சர்க்காரிடத்து இவர்களுக்கு மதிப்பு எவ்வளவு அதிகமாக இருந்ததோ அதற்குத் தகுந்தபடி காங்கிரஸ் தீர்மானங்களும் நல்ல செல்வாக்குடையனவாக இருக்கும் என்னும் எண்ணமும் காங்கிரஸை நடத்துபவர்களின் மனத்தில் குடிகொண்டிருந்தது.

''மக்களைத் தட்டி எழுப்பி, அவர்கள் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் தேசிய உணர்ச்சியைத் தேச விடுதலையின் சார்பாகக் கிளப்பி உருப்படுத்தக் கூடிய சக்தி காங்கிரஸுக்கு அப்பொழுது இல்லை. முறையிடும் துறையிலே, அதிகாரிகளுடைய மனம் நோகாமல், நியாயத்தைப் பக்குவமாக எடுத்து உணர்த்தி வாதாடும் தோரணையைக் கைப்பற்றி வந்தது காங்கிரஸ்; ஆங்கிலம் படித்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு முடியாமல் போய்விட்டது. காங்கிரஸில் சேர்ந்தவர்களின் பெரும்பாலோர் வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்தும் வக்கீல்கள். ஆங்கிலத்தில் பேசும் திறன் அவர்களுக்குத் தொழில் முறையில் ஏற்பட்டுவிட்டதால், காங்கிரஸ் நடவடிக்கைகளிலும், கோர்ட்டு நடவடிக்கைகளைப் போலவே விவாதித்து முடிவுகட்ட அந்த அனுபவம் அவர்களுக்கு உதவியாக இருந்தது.''

இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே அடுத்த பக்கத்தைப் புரட்டினேன். அங்கே, விடுதலைப்போரில் ஈடுபடும் முறை பற்றிய ஒரு குறிப்பு கண்ணில் பட்டது.

''சுதந்திரம் வேண்டுமென்றுல் உயிரையும் தியாகம் செய்து அதைப் பெறவேண்டும். தியாகம் செய்யும்பொழுது 'நான் ஒருவன் மட்டும் செய்தால் காரியம் சித்தி பெறுமா?' என்று எண்ணுவது கோழைத்தனம்; காந்தியடிகள் அடிக்கடி சொல்லுவது போல, ஒவ்வொருவனும் தான் விரும்பும் பொருளை அடையச் சகல விதமான தியாகத்தையும் செய்ய வேண்டும். தன்னைப் பொறுத்தமட்டும் தனது பரிபூரணத் தியாகமே தனக்கு விடுதலை அளிக்கும் என்கிற தத்துவத்தின் உண்மை ஒப்பற்ற ஒரு வீரன் மனத்தில்தான் உதிக்கும். போரில் ஈடுபடும் ஒவ்வொரு வீரனும், 'நான் ஒருவன் மட்டும் இறந்தால் ஐக்கியம் கிடைக்குமா? என்று நினைத்தால் யுத்தத்தின் முடிவு எப்படியாகும் என்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். எந்தக் கிளர்ச்சியும் ஒரே காலத்தில் எல்லோர் மனத்திலும் உதயமாவதில்லை. புத்திக்கூர்மையும் உணர்ச்சியும் பொருந்திய ஒருவன் மனத்தில் தோன்றும் புனித எண்ணங்களே பெருவெள்ளமாக மாறி, மனித சமூகத்தைப் புரட்டி அமைக்கும். அந்த மனிதனது தியாகத்தின் பலனுகவே பலர் தியாகம் செய்ய முன்வருகிறுர்கள்; ஆற்றைக் கடந்து அக்கரை சேர விரும்பும் ஒவ்வொருவரும் தண்ணீரைக் கண்டு மயங்கி, நீந்த முற்படாவிட்டால் தண்ணீரை எப்படித் தாண்டுவது?''

முந்திய பகுதியில் குறிப்பிட்ட விதமாகவே செயல்பட்டு வந்த அக்கால வக்கீல்களுக்கு, இரண்டாவது குறிப்பில் கண்ட வீர எண்ணம் உண்டாகவே இல்லை; ஏதோ, தங்கள் வயிற்றுப் பாட்டையும் வீட்டுப்பாட்டையும் கவனித்துவிட்டு, அவர்கள், வரலாற்று மணலில் முகம் தெரியாமல் புதைந்து போனுர்கள். காங்கிரஸை மக்கள் இயக்கமாகவும் தீவிரமான போரணியாகவும் மாற்றிய காந்தியடிகள் போன்றோரே புகழுக்கு உரியவர்களானுர்கள்.

இந்த வரலாற்று உண்மையை ஈழத்துத் தமிழ்க் காங்கிரசார் விளங்கிக்கொள்ளக் கூடுமானுல் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை உண்டு. அவர்கள் இதைப்புரிந்து கொண்டு திருந்திக் கொள்ளப் போகிறுர்களா, அல்லது ''கெடு குடி சொற்கேளாது'' என்னும் பழமொழியைத்தான் மெய்ப்பிக்கப் போகிறுர்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

—சாலை இளந்திரையன்
புதுடில்லி, 15.3.71.

## தமிழ் ஏடுகள் மீண்டும் இறக்குமதி! தி.மு.க. ஏடுகளுக்கு மட்டும்தடையா?

தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு இறக்குமதியாகிக் கொண்டிருந்த தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்துக்கும் இங்கு தடைவிதித்து, ஈழத்துக்கும் தமிழகத்துக்குமுள்ள கலாசார இலக்கிய தொடர்புகளை துண்டிக்கும் முயற்சியில் இலங்கை அரசு கடந்த சில மாதங்களாக ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. எச். எம். பி. மொஹிதீனும் தமிழ் அமைச்சர் குமாரசூரியரும் தமிழ் கொம்யூனிஸ்டுகளும் தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் இந்த துரோகச் செயலில் இறங்கி இதற்கென ஒருகுழுவும் அமைத்து செயல்பட்டனர்.

ஆனுல் தமிழ் மக்களுக்கு எதிராக செய்யப்படும் இந்த மாபெரும் அநீதியை எதிர்த்து 'சுதந்திரன்' தனித்து நின்று போராடியது. தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கடுமையான எதிர்ப்பை ஆளுங்கட்சியினரின் கவனத்துக்கு கொண்டுவந்தது. தமிழரசுக் கட்சியும், தமிழர்களின் மற்றும் பல பொது மன்றங்களும் சுதந்திரன் நடத்திய இப்போராட்டத்தில் கைகொடுத்து உதவின.

தமிழக ஏடுகள் இறக்குமதியைத் தடை செய்திட வேண்டுமென்பதிலே தமிழ்த்துரோகி தினபதியார் ஆலாய்ப் பறந்து திரிந்தார்.

சுதந்திரனின் எதிர்ப்பின் பயனுக தமிழ்நாட்டிலிருந்து வாசகர்கள் சந்தா செலுத்தி தனிப்பட்ட முறையில் பத்திரிகைகளை தருவிக்கலாமென இடையில் ஒரு யோசனையை குமாரசூரியர் குழு தெரிவித்தது. ஆனுல் அதையும் நாம் ஏற்கவில்லை. முன்போல ஏஜண்டுகள் மூலம் தமிழக ஏடுகள் கிடைத்திட வழி செய்யவேண்டுமென தொடர்ந்து வாதாடி வந்தோம்.

தமிழ் மக்களின் பூரண ஆதரவுடன் சுதந்திரன் நடத்திய போராட்டம் இப்போது வெற்றிபெற்றுள்ளது; அரசாங்கம் பணிந்தது. மீண்டும் தமிழக ஏடுகள், சஞ்சிகைகள் யாவும் இறக்குமதியாகின்றன. கொழும்பிலுள்ள கடைகளில் எல்லாம் அவற்றை இப்போது வாங்கக்கூடியதாக இருக்கிறது.

ஆனுல் தி. மு. கழக ஏடு ஒன்றுகூட இன்னும் இறக்குமதியாகவில்லை. இதற்குக் காரணமென்ன? தி. மு. க. ஏடுகளுக்கு மட்டும் ஏன் தடைவிதிக்கப்பட்டது? தி. மு. க. ஏடுகளும் இறக்குமதி செய்யப்படவேண்டுமென்று தமிழர்கள் தொடர்ந்து கிளர்ச்சிசெய்யவேண்டும்.

## உபதபால் அதிபர் நியமனம் எப்படி?

கைதடி உபதபால் அதிபர் பதவிக்கு நியமனம் கோரப்பட்டு 13 வாலிபர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் மூவர் திறமையான புள்ளிகள் பெற்றிருந்தும், திறமை அடிப்படை புறக்கணிக்கப்பட்டு கைதடி ஸ்ரீ. ல. சு. கட்சிக்கிளை செயலாளருக்கு மேற்படி பதவி வழங்கப்படுவதற்கு நியமனக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம். இவர் அமைச்சர் ஒருவருக்கு கட்சியை வளர்ப்பேன் என்று அளித்த உறுதியின் பேரில் இது வழங்கப்பட்டதாம். இதை அறிந்த சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் அவசர தந்தி ஒன்றை தபால் அமைச்சுக்கு விளக்கம் தரும்படி அனுப்பியபோது அது அங்கு கிழித்து வீசப்பட்டதாம். இதை அறிந்த கைதடி வாலிபர்கள் இதுதானு சோசலிசம் என கேட்கின்றனர்.

### தமிழில் அஞ்சல் பதிவு ரசீது பெறமுடியாதா?

சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் உயர் கல்விச் சபைக்கு அனுப்பிய தமிழில் முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதத்துக்கு, தமிழில் ரசீது கொடுக்க முடியாதென ஆங்கிலத்தில் வழங்கினுராம். இந்த ரசீதை ஏற்கமறுத்த வாலிபன் மீது அதிகாரிகள் சீறினராம். கடைசியில் முயற்சி கைகூடாமல் போகவே தபால் அதிபரோடு தொடர்பு கொண்டு பேசிய பின் அதிபர் தமிழில் வழங்கினுராம்.

கடைசியில் வாலிபன் ஐயா! இனியும் தமிழில் ரசீது பெறவேண்டுமானுல் உங்களிடம் வரவேண்டுமா என கேட்டாராம். அவரும் சினந்துவிட்டு எனது வேலை எனக்குத் தெரியுமென கூறினுராம். அங்கு கூடியிருந்த மக்கள் தபால் அமைச்சர் குமாரசூரியது அமைச்சிலே இப்படி நடக்கிறதா? இவரா தமிழுக்கு சேவை செய்யப் போகிறுரென பேசிக் கொண்டனர்.

## சாம்பல்தீவு கிராமசபை தீர்மானம்

திருகோணமலையில்உள்ள கோணேஸ்வரர் குடிகொண்ட சுவாமிமலை பிரதேசத்தை புனிதஸ்தலமாக்க வேண்டும். இலங்கை சுதந்திரம் அடைந்து சுமார் 22 வருடங்கள் முடிந்துவிட்டது; ஆனுல் இவ்விடயம் இட்டவட்டமாக தீர்க்கப்படவில்லை. ஆசியாவிலும் உலகத்திலும் உள்ள இந்துக்களுக்கு இத்தேவாலயம் மிகவும் முக்கியமானது. ஆனபடியால் இப்புனித கைங்கரியத்தை அரசாங்கம் சாதி, மத, கட்சி, பேதமில்லாமல் உடனடியாக செய்ய முன்வரவேண்டும். கோணநாயகப் பெருமானுடைய பிரதேசப் பகுதிக்கு, விக்கிரம ராசசிங்க அரசனுடைய பெயரைச் சூட்டுவது பொருத்தமற்ற செயல். அரசினர் இவ்விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்''

மேற்கண்ட தீர்மானம் சாம்பல்தீவு கி. ச. கூட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை நா. தம்பிராசா பிரேரிக்க திரு. க. வேலாயுதம் ஆமோதித்தார்.

## உயிர் தமிழுக்கு!

நாங்கள் பலி ஆடுகள் நம்புங்கள்!
வேங்கடம் ஈழம் இருபால் விளங்க
ஏனை இருதிசை கடலொலி எழுப்ப
நின்ற மண்ணில் நாளை விடுதலை
ஒன்றே மூச்சாய்த் தமிழன் உயர்த்தும்
வேள்வித் தீயில் விழுந்து மடிவோம்!
உண்மை! எங்கள் உயிர்மேல் ஆணை!
வளர்த்து விட்ட அன்னையீர்! மானம்
அளித்த முலைகளே! வருக! வந்து
கழுத்தெலாம் மாலை கட்டுங்களம்மா!
சந்தனம் கொணர்ந்து சாத்தி மகிழ்வீர்!
தடவிக் கொடுங்கள்......உங்கள் தமிழ்க்கை
படபடத் தோள்கள் விம்மிப் பருப்போம்!
இதென்ன நாங்கள் பதுமைகளைப்போல்
இரத்தமும் உயிரும் இல்லாச் சாதியா?
அன்னைத் தமிழின் அழு குரல் கேட்டும்
திண்ணை ஆண்டி போல் சிலபேர் தூங்கினுர்!
நாங்கள் தூங்குதல் செய்யோம்! ஏனெனில்
எங்கள் உடலில் இரத்தம் உள்ளது!
கேளீர்......இந்தக் குருதியை நாங்கள்
வேள்வித் தீயில் விடும்நாள் திருநாள்!
தமிழுக்காவே எங்கள் தசைகள்!
தமிழுக்காகவே தலையும் உடலும்!
எங்கள் இன்னுயிர் எனப்படும் அந்தத்
தங்கக் காற்று தமிழன் னைக்கே!
நாங்கள் பலி ஆடுகள் நம்புங்கள்!

—காசி ஆனந்தன்

## முஜிபுரும் கருணநிதியும்!

'இளஞ்சிங்கம் கலைஞரின் தலைமையில் தமிழகம் புதிய பாதையில் நடைபோடுகிறது; ஏழைகள் நிறைய எதிர்பார்க்கிறுர்கள். அவர்களது துயரைத் துடைக்க போதிய அதிகாரம் தமிழ்நாடு அரசுக்கு இல்லை; மாநில சுயாட்சி கிடைத்தால் தான் நாம் நினைத்ததை நிறைவேற்ற முடியும்; தமிழ்நாடு சுயாட்சி அரசாக இருந்திருந்தால் கலைஞரை உலகநாடுகள் அழைத்திருக்கும்; முஜிபுர் ரஹ்மான் நமக்கு வழிகாட்டவில்லை; அவர் முந்திக்கொண்டார். அவ்வளவுதான்.'

—சென்னை பாலர் அரங்கில் ம. பொ. சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். கே. ராணி,
நல்லூர்.

கே: திமோல் அருளம்பலத்தின் நடிப்பை நம்பி எம். பி. யாக தெரிவுசெய்த நல்லூர் மக்கள் இப்போது அவரின் உள் நோக்கத்தை அறிந்து மனம் எரிகிறார்கள்: இதற்கு மருந்து என்ன?

ப: இதற்கு உடனடியாகச் செய்யக்கூடிய மருந்து நல்லூர்த் தொகுதி மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழினத்துக்கு துரோகம் செய்யவிடாமல் அருளம்பலத்தை அறவழியில் தடுத்து நிறுத்துவது தான்!

ஃ

ச: இரத்தினசிங்கம்,
மட்டுநகர்.

கே: மட்டக்களப்பிலே ராஜன் செல்வநாயகம் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை திறக்கப்போகிறாராமே உங்கள் அபிப்பிராயம்?

ப: ஆமாம், 'திறப்பு' விழாக்கள் நடத்துவதில் அவர் வல்லவர் என்று கேள்வி!

ஃ

சி. சம்பந்தமூர்த்தி,
செங்கலடி.

கே: மானம் கெட்ட தினபதியார் இந்தியப் பொதுத் தேர்தலுக்கு முன்பு தி.மு.க. பற்றி இருந்த நிலையில் இருந்து தேர்தலுக்கு பின் மாறியதின் மர்மம் என்ன?

ப: தமிழ் பேசும் மக்களிடையே தனது பத்திரிகையை விற்பனை செய்ய இது ஒரு சூழ்ச்சி!

ஃ

தமிழ்மாறன்,
சாஸ்திரிகூழாங்குளம்:

கே: மதத்தை அபின் என வர்ணிக்கும் ஒரு கம்யூனிஸ்ட் வால்பிடி தனது வீட்டில் முருகன் படத்தை வைத்துக் காலை மாலை தவறாது வணங்கி வருகிறாரே இதன் மர்மமென்ன?

ப: சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பட்டு நடப்பதுதானே கம்யூனிஸ்டுகளின் பிறவிக்குணம்!

வி. திருச்செல்வம்,
சங்கானை:

கே: 'மக்கள் அரசாங்கம்' என்று பெயர் சூட்டிக் கொண்டு மக்களின் அதிமுக்கியமான உணவுப் பொருட்களின் விலை வாசிகளைக் கூட்டுவதன் மர்மமென்ன?

ப: மக்களை மாக்களாக கருதுவதனால்!

கே: தகுதிப்புள்ளி தமிழருக்கு ஒன்று-சிங்களவருக்கு இன்னொன்று இதற்குப் பெயர் என்ன குயுக்தியாரே?

ப: இதற்குப் பெயர்தான் சிங்கள சோசலிசம்!

ஃ

செ: திருவேல்,
தெல்லிப்பழை:

கே: 'ஒரு புதிய பாதை ஒரு புதிய தலைவன்' என்ற நூலில் வரும் கதாநாயகன் கருத்து பற்றி தங்கள் கருத்து யாது?

ப: புதிய மொந்தையில் பழைய கள்ளை ஊற்றிக்குடிக்கிறார்!

ஃ

க: செல்வராசா,
அளவெட்டி தெற்கு:

கே: குமாரசூரியர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சாஸ்டாங்க நமஸ்காரம் செய்ததாக ஒரு பத்திரிகை படம் பிடித்து செய்தி போட்டதே? இதில் என்ன புதுமை இருக்கிறது?

ப: தமிழை ஒழித்துக்கட்டி வரும் சிறிமா அம்மையாருக்கு முன்னர் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கிவருபவர் தமிழ்க் கடவுளான முருகனுக்கு முன் வீழ்ந்து வணங்கினாரென்றால் அது புதுமைதானே!

ஃ

ம: மகேஸ்வரன்,
காலையடி, பண்டத்தரிப்பு:

கே: மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் அம்மாவின் கதியென்ன?

ப: குசினி வேலையைப் பார்க்கவேண்டியதுதான்!

ஃ

ராஜன்,
தொண்டமானாறு:

கே: தமிழ்த் துரோகி குமாரசூரியர் கலப்புத் திருமணமும் செய்து தன் பெயரையும் சிங்களத்தில் மாற்றி விட்டால்...?

ப: அப்படிச் செய்தாலும்-பிறப்பால் அவர் ஒரு பௌத்த சிங்களவராக இல்லாத காரணத்தினால் இந்நாட்டின் முதலமைச்சராகவோ நிதியமைச்சராகவோ ஒருபோதும் வர முடியாது!

ஃ

பாண்டியன்,
அராலி.

கே: தியாகராசாவுக்கு மந்திரிப்பதவி கிடைக்குமென்று ஒரு கொள்கையற்ற வால்பிடி கூறுகிறது. இது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: மந்தி(ரி) பதவி ஒருவேளை கிடைக்கலாம்!

ஃ

வீ. ஜீவராஜ்,
களுத்துறைதெற்கு:

கே: சென்றமுறைத் தேர்தலில் காமராசரை ஆதரித்து நடிகை பத்மினி பிரசாரம் செய்து மூக்கறுபட்டார்: இம்முறை..?

ப: முன்பு படித்த பாடத்திலுள் [illegible] பக்கமே இம்முறை அவர் தலைகாட்டவில்லை!

ஃ

இ: பிலேந்திரன்,
மாதகல்,

கே: வட்டுக்கோட்டை 'வால்' சென்ற இடமெல்லாம் மக்களால் ஒதுக்கப்படுவதற்கு காரணமென்ன?

ப: அது அம்மையாரின் வாலாக இருப்பதனால்!

ஃ

மா: ஞானச்சந்திரன்,
மாதகல்.

கே: தமிழ் காங்கிரசைப் பற்றித்தங்கள் கருத்தென்ன?

ப: செத்த பாம்பைப்பற்றி இனிக்கூறுவதற்கு என்ன இருக்கிறது?

ஃ

சி. ஈஸ்பரநாதன்,
கிரான்:

கே: பட்டிருப்பில் இனித் தேர்தல் நடைபெற்றால்...?

ப: கட்சித்தலைவர் இராசமாணிக்கம் அவர்கள் பாடிப் பாடி வெற்றிபெறுவார்!

ஃ

பொன்: கனகராசா,
அனுராதபுரம்:

கே: சிண்டிகேட் 'சிவாஜி'யின் நிலை என்னாச்சு?

ப: 'வண்டி' இப்போது வற்றிவிட்டதாக கேள்வி!

ஃ

ஏ. ஜி. அகஸ்டின்,
கோண்டாவில் கிழக்கு,

கே: இந்திராகாந்தி, கருணாநிதி இருவருக்கும் பொதுத்தேர்தலை நடத்தும் துணிச்சல் எப்படி ஏற்பட்டது?

ப: இந்திராகாந்தி நேருவின் செல்வமகள் — கலைஞர் கருணாநிதி அண்ணாவின் தம்பி—இதனால்தான் இருவருக்கும் அந்தத் துணிச்சல் வந்தது!

ஃ

பகீரதன்,
கொகுவலை:

கே: தி: மு: கழகத்தின் கொள்கையென்ன?

ப: தமிழ் மக்களுக்கு தனியாட்சி பெறுவது!

ஃ

சி: பாலமுருகன்,
பரந்தன்:

கே: மந்திரி குமாரசூரியர் தமது பதவியைத் துறந்து விட்டு பண்டாரநாயக மண்டபக்கட்டட வேலையில் ஈடுபடுவாரா?

ப: மாட்டார்— தமிழினத்துக்கு சமாதி கட்டுவதில் தான் ஈடுபடுவார்;

ஃ

ந. பேரின்பமூர்த்தி,
கட்டுவன் தெற்கு:

கே: பட்டிருப்பு தம்பிராசா இப்போது என்ன செய்கிறார்?

ப: கதிரைக்கு பாரமாக இருந்து கொண்டு கூலிகளாக மாதம் 800 ரூபா தண்டச் சம்பளம் வாங்குகிறார்!

ஃ

அ. குணசேகரன் (பபா),
கொழும்பு-13

கே: 'தமிழ் புறக்கணிப்பு, கண்காட்சியின் பின்பு தபால் (டமிழ்) அமைச்சர் குமாரசூரியருக்கு காக்காய் வலி பிடித்து விட்டதாமே!

ப: அப்படியா? சிங்கள சோசலிச அரசாங்கத்தின் முகமூடி கிழிந்துவிட்டதால் இந்த 'காக்காய்' வலி வந்திருக்கலாம்!


திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# தமிழனின் வேட்கை

(ஞான சுப்பிரமணியம்)

அருமருந் தன்ன அன்னைத் தமிழின்
திருநிறை மறைகள் சிறப்புடன் மாந்திக்
கரையிலாக் கடலென கற்றோர் போற்றும்
வரைவி லாற்றல் லாய்ந்த நற் செல்வ!
முடியுடை வேந்தர் மூவர் வளர்த்த
துடியிடைப் பூவை தூயசெந் தமிழினை
முன்னோர் போல முறைமுறை நிறீஇ
எந்நா ளும்மே இறைமை யாங்கணும்
முன்னிப் பெருகிட முயங்கு நன் மகனே!
கன்னித் தமிழின் கவின்பெறு தலைவ!
கருணா நிதியெனும் கார்முகிற் பெரும!
திருநிறை செல்வ! சீருடை மணாள!
நின் நலன் சிறக்க! நின் புகழ் பெருகுக!
மன்னிய வுலகில் மகிழ்ந்து வைகுக!
சேரன் சோழன் பாண்டியன் பிறரும்
சேரவே யாண்ட செந்தமிழ் நாட்டின்
அரசுப் பொறுப்பை அமைவரம் பெற்றோய்!
புறநா னூற்றிற் புகன்றன போன்றும்
மறைஇரண் டடியில் மலர்ந்தன போன்றும்
சிலப்பதி காரத்திற் செப்பிய போன்றும்!
கலித்தொகை தன்னிற் கண்டன போன்றும்
பத்துப் பாட்டிற் பகர்ந்தன போன்றும்
எட்டுத்தொகையில் இயம்பிய போன்றும்
தமிழ்த் தாய்க்கொரு தனியிடம் வகுத்துக்
கன்னித் தமிழ்தான் கவின்பெறு மொழியென
உன்னிப் பலரும் உய்த்திட யாங்கணும்
மொழிகட் கெல்லாம் முதன் மொழி தமிழ்தான்
அழியாப் புகழ்சால் அன்னைத் தமிழ்தான்
தமிழகம் என்னும் தனியரசு நிறீஇ
பாரிற் பல்புகழ் படைத்திடச் செய்வாய்!
அடிமைத் தமிழன் அவனியில் இல்லென
மிடிமை போக்கி மேம்படச் செய்வாய்
தமிழைப் பழித்த சால்பிலா மாக்கள்
தமிழைப் போற்றத் தகுவன செய்வாய்!
தமிழகம் தான்,
சீன, யப்பான் சீயம் பர்மா
இங்கிலண்ட் சேர்மனி இத்தாலி ருசியா
பிரான்சு கனடா பிலிப்பையின் கொறியா
போலன்ட் நெதலன்ட் பொலிவுறு டென்மார்க்
இன்னன நாடுபோல் இறைமை முடைத்தாய்
தன்னிக ரில்லாத் தமிழ் நாடு காண்டல்
அண்ணாத் துரையின் அருமைத் தம்பீ!
கண்ணா யிரமுடைக் கருணா நிதியே!
உன் வாழ் நாளில் உடைத் தாகுகவே!
தனித் தமிழ் நாடுதான் தமிழனின் வேட்கை;
முன்னோர் ஆண்ட முத்தமிழ் நாடுபோல்
எந்நாள் வருமோவென ஏங்கினும் யாமே!
பிறவா யாக்கைப் பெருந்தகை யண்ணல்
இறவா யாக்கை நிலைக்கீயும் மன்னே!
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளா!
தமிழ்க்கென வாழும் தகைமையோய் கேண்மின்
நின் வாழ்நாள் தான்,
காவிரி யாற்று மணலினும் பலவே
நின் ஆற்றல்தான்,
பல் வழியாலும் பல்கிப் பெருகுக
அண்ணா குறித்த அருகதிறற் தொழிலினை;
அம்பீ! நீயே ஆற்றக் கடவை!
(தமிழன் தலை நிமிர்ந்து வாழ)
தமிழுக் கெனவோர் தனிநாடு வேண்டும்
தமிழுக் கெனவோர் தனியரசு வேண்டும்
தமிழுக் கெனவோர் தனியிடம் வேண்டும்
வேலை சூழ்ந்த வியனீர் உலகில்
சாலை எங்கணும் தமிழ்க் கொடி பறக்கவே
வாழிய தமிழே வாழிய தமிழே
ஆழி சூழுலகில் அனைவரும் தொழவே:


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப்பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 ஆம் வீதி கொழும்பு-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக்கொள்கை எம் உயிரோடு கலந்தது; அதை பெறும்வரை ஓயமாட்டோம்!

## தமிழ் இராச்சியம் கேட்ட தியாகராசா ஒற்றையாட்சிக்காக இன்று ஓலமிடுகிறார்!

## தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படும்வரை இந்நாட்டில் ஒருபோதும் அமைதி நிலவாது!

### அ. நி. சபையில் பண்டிதர் இரத்தினம் முழக்கம்!



இப்போது உலகம் எங்கும் பெரும்பாலும் மொழிவாரிப் பிரிவினை நடந்துகொண்டிருக்கின்றது. இந்தியாவிலே மொழிவழிப்படி மாகாண அரசுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இன்று பாகிஸ்தானைப் பாருங்கள். அங்கே ஒரே மதத்தவர்களாக இருந்தும் வங்காளதேச மக்கள் தங்கள் மொழிக்கு முதன்மை தேடி தனியே பிரியப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். உலக சரித்திரம் காட்டுவது என்னவென்றால் மொழிவாரிதான் பிரிவுக்கு அடிப்படைக் காரணம் என்பதுதான். மதம் ஒரு மாநிலப் பிரிவுக்கு முக்கிய காரணமாக இல்லை. மதத்தால் ஒன்றுபட்டவர்கள்கூட மொழிவாரியாகப் பிரிந்து போக முயலுகிறார்கள். எங்கள் உணர்ச்சி கூறுவதுகூட மதத்திலும் பார்க்க மொழி மனிதர்களை உணர்ச்சியூட்டக் கூடியது என்பதுடன் பரந்த அளவில் இணைக்கத் தக்கதாக இருக்கிறது என்பதே. இதை நாங்கள் மறக்கக் கூடாது. எனவேதான் மொழியால் வேறுபட்ட மக்கள் தன்னாட்சிகோரி உலகில் பலபோராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள்.

எங்கள் நாட்டிலும் இரு பெரும் மொழிவாரி இனங்கள் இருக்கின்றன. மொழி அடிப்படையில் சிங்களம் பேசும் மக்களும் தமிழ்பேசும் மக்களும் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். இந்த இரு மொழிவாரி இன மக்களும் ஒன்றாக வாழவேண்டும். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று சொல்லும்போது—கௌரவ ஹபருதுவப் பிரதிநிதி (திரு. பிரின்ஸ் குணசேகர) கூறுவதுபோல தோழர்களாக வாழவேண்டும் என்று சொல்லும்போது—உரிமையை விட்டுக்கொடுத்து, மொழியை விட்டுக்கொடுத்து ஆட்சியிற்பங்கை விட்டுக்கொடுத்து, தமது நாட்டை விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்று எவரும் எண்ண மாட்டார்கள்.

### இணைப்பாட்சி வேண்டும்

இரு இன மக்களும் ஒன்றாக வாழவேண்டும் என்றால் அத்தகைய ஆட்சியைத்தான் நாங்கள் இணைப்பாட்சி என்று சொல்லுகிறோம். ஆகையால் ஒற்றுமை என்று பேசும்போது ஓநாய்க்கும் ஆட்டுக்கும், பாம்புக்கும் தவளைக்கும் ஒற்றுமை ஏற்படமாட்டாது. ஆகவே, ஒற்றுமை இருக்க வேண்டும் என்றால் சிறுபான்மை இனமக்களின் அச்சத்தைப் பெரும்பான்மை இன மக்கள் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் பெரும்பான்மை மக்களில் நம்பிக்கை கொள்ளத்தக்கதாக இருக்கும்.

உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டிலே ஒரு அரசியல் அமைப்பை உண்டாக்கப் போகிறோம் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் அந்த அரசியலமைப்பு ஒற்றை ஆட்சியா அல்லது சமஷ்டி ஆட்சியா என்று கூறப்படவில்லை. ஆனால் நாங்கள் உங்களிலும் பார்க்க ஒருபடி மேலே சென்று இந்த நாட்டுக்கு ஒரு சமஷ்டி ஆட்சி—இணைப்பு ஆட்சி—வேண்டும்; அதுதான் எங்களுடைய நோக்கம் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, இரண்டு பேரினங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் — இதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்த கட்சியினுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டுக்கு அரசியலமைப் பொன்றை திருத வேண்டும் எனக்கூறப்பட்டிருக்கின்றது; தமிழரசுக் கட்சியினுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே சமஷ்டி ஆட்சி — இணைப்பாட்சி—தான் எங்கள் குறிக்கோள் என்று நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

இந்த நாட்டிலே தமிழ் மக்கள் இப்பொழுதுள்ள நிலையிலே, தமிழ் மக்களுடைய வாக்கினால் பெறத்தக்க பதினெட்டுத் தொகுதிகளிலே பதின்மூன்று தொகுதிகளை, ஏறக்குறைய 68.4 வீதமான தொகுதிகளை நாங்கள் வென்றுள்ளோம். அப்படிப்பட்ட வெற்றியைப் பெற்ற எங்களைப் போலவே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினராகிய நீங்களும் ஏறக்குறைய 68.2 வீதமான தொகுதிகளைப் பெற்றுள்ளீர்கள். உங்களோடு மற்றவர்களும் சேர்ந்து இருக்கின்றார்கள்.

எனவே, மனச்சாட்சியை மாசுபடுத்தாமல், பகுத்தறிவைப் பயன்படுத்தி, கணக்கைக் கணக்கு என்ற எண்ணுகிற மக்களுக்கு ஒன்று கூறுகிறேன்: நீங்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டீர்களோ—எவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் அனுப்பிவைத்தார்களோ—அதைப் போலத்தான் தமிழ் மக்கள் எங்களையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

### கொள்கையைக் கைவிடமாட்டோம்

நாங்கள் பெரும்பான்மை இன மக்களோடு ஒற்றுமையாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இலங்கையைக் குடியரசாக்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஆதரித்து இருக்கிறோம். குடியரசாக்கும் தீர்மானத்தை நாங்கள் எதிர்த்து இருக்கலாம். இந்த நாட்டிலே எங்களுக்கு சமஷ்டி ஆட்சி தராவிட்டால் நாங்கள் அரசியலமைப்புச் சபையிலே பங்குபற்ற மாட்டோம் என்று கூற எங்களுக்கு உரிமையுண்டு. எனினும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்; எங்களுடைய கருத்தை இந்தச் சபையிலே எடுத்துக் கூற வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்த அரசியலமைப்புச் சபையிலே வருகிற நல்ல தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு எங்களுடைய உரிமைக்காக எங்களுடைய கருத்துக்களை வலியுறுத்தவே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். இந்தநாட்டிலே ஒரு இணைப்பாட்சிவேண்டும் என்றுதான் நாங்கள் எங்களுடைய திருத்தத்தைத் தந்திருக்கிறோம். உங்களுக்குள்ள வாக்குப்பலத்தினாலே நீங்கள் அந்தத் திருத்தத்தைத் தோற்கடிக்கலாம். ஆனால் நாங்கள் எங்களுடைய இணைப்பாட்சிக் கொள்கையை என்றும் கைவிட மாட்டோம். நாங்கள் இந்த இணைப்பாட்சிக் கொள்கையைக் குருட்டுத்தனமாகக் கைக்கொள்ளவில்லை. ஏதோ ஒரு கொள்கையைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகக் குருட்டுத்தனமாக இணைப்பாட்சிக் கொள்கைக்கு நாங்கள் வரவில்லை. சரித்திரப் பின்னணியை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் நாங்கள் இதில் உந்தப்பட்டிருக்கிறோம்—தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை அவதானிக்க முடியும். இங்கிருக்கும் ஒற்றையாட்சியினாலே நாங்கள் துன்புறுத்தப்பட்டபடியால் அதற்கு மாற்று மருந்தாக இதைக் கைக்கொள்ள உந்தப்பட்டோம். அடிபட்டு அடிபட்டு ஓர் இலட்சியத்தை நோக்கி உந்தப்பட்ட கொள்கை இந்த இணைப்பாட்சிக் கொள்கை. இது உங்களுக்கு விளங்காமல் இருக்கலாம். நாங்கள் கடந்த காலத்தில் அடைந்த துன்பங்களினாலேயே நாங்கள் இதை எங்கள் உயிர்க் கொள்கையாக வைத்திருக்கிறோம்.

### தமிழரின் கருத்தை உணருங்கள்!

மொழியுரிமையளவிலே தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கவேண்டும் என்ற கொள்கைக்காக எங்களுடன் தோளோடு தோள் நின்று போராடிய லங்கா சமசமாஜக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் பின் அதைக் கைவிட்டார்கள். ஆனால் அந்தக் கொள்கையை நாங்கள் இன்னமும் கைவிடாமல்தான் இருக்கிறோம். தமிழ் மக்கள் என்ற முறையிலே—தமிழ் மொழியைப்பேசுகிற மக்கள் என்ற முறையிலே—எங்களுக்குவந்த பல துன்பங்களினாலும் எங்களுடைய உரிமைகளை இழந்ததனாலும் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில்தான் இணைப்பாட்சிக் கொள்கை நல்ல கொள்கை என்ற முடிவுக்கு வந்தோமேயொழிய வேறு கொள்கை இல்லாமல் இதைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணக் கூடாது. அந்தத் துன்பங்கள் நீங்காமல், அச்சங்கள் நீங்காமல், இழந்த மொழியுரிமை கிடைக்காமல், இழந்த ஆட்சியுரிமை கிடைக்காமல், நாங்கள் இந்த நாட்டிலே சமத்துவமாக நடத்தப்படாமல் இருந்தால் நாங்கள் வேறெந்த கொள்கையையும் கைப்பற்ற முடியாது. இந்தச் சமஷ்டி ஆட்சிக் கொள்கை இங்கே எடுபடாமல் போகுமானால் இந்த நாட்டிலே தனி ஆட்சி என்ற கொள்கை, தனி நாடு என்ற கொள்கைதான் வலுப்பெறும் என்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன்.

தமிழ்ப் பகுதிகளிலே, தமிழ் மக்களுடைய கருத்து என்னவாக இருக்கிறது என்பதைக் கொஞ்சம் சொல்லி வைக்க விரும்புகிறேன். நீங்கள் பத்திரிகைகளில் மட்டும் சிலவற்றைப் பார்ப்பீர்கள். அல்லது உங்களுடைய கட்சிக்காரர்கள் வந்து அங்கேயுள்ளவற்றை மறைத்துக் கூறுவார்கள். நான் இங்கே ஒரு புத்தகம் வைத்திருக்கிறேன். ''இருபத்து நாலு இலட்சம் தமிழரின் வருங்காலம்—தமிழ் ராஜ்யம் ஒன்றே வழி'' என்று தமிழ் மகா சபையின் முதலாம் வெளியீடாக இப்போதைய வட்டுக்கோட்டைத் தொகுதியின் பிரதிநிதி (திரு. ஏ. தியாகராசா) அவர்கள் 1956 ஆம் ஆண்டு வெளியிட்டது; இது பாராளுமன்றத்துக்குப் போவதற்காக வெளியிடப்பட்டது. பாராளுமன்றத்துக்குப் போவதற்கு ஒரு கொள்கை; பாராளுமன்றத் தேர்தலில் வென்ற பின்பு ஒரு கொள்கை என்பது தமிழரசுக் கட்சியினரிடம் இல்லை. இதைப்பற்றி எனக்குப் பின் பேச இருப்பவர்கள் கூறுவார்கள். ''தமிழ் ராஜ்யம் ஒன்றே வழி'' என்று, இப்பொழுது சற்று முன்பு சமஷ்டி வேண்டாம்; ஒற்றையாட்சி வேண்டும் என்று கூறிய கௌரவ வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அவர்கள் 1956 ஆம் ஆண்டிலேயே கூறியிருக்கிறார்.

''இருபத்துநாலு இலட்சம் தமிழரின் வருங்காலம்—தமிழ் ராஜ்யம் ஒன்றேவழி'' என்பதுதான் அந்த நூலின் பெயர்.

இந்தத் துண்டுப் பிரசுரத்தில் எங்கள் பிரச்சினைக்குத் தனித் தமிழ் நாடு ஒன்றே வழி என்று அவர் அன்று கூறினார். இப்பொழுது அவர் தமது கருத்தை மாற்றியிருக்கலாம். அதனை நாம் மறுக்கவில்லை. இதனை எதற்காகச் சொல்கின்றேன் என்றால்,

1956ஆம் ஆண்டிலே எங்கள் தமிழரிலே ஒருவருக்கு தமிழ் இராசசியம் பெற வேண்டும் என்ற கருத்து உதித்தது. அவர் இப்பொழுது தமது கருத்தை மாற்றியிருந்தாலும் கருத்து உண்டாகிவிட்டது; கருத்து நிலைத்து விட்டது.

ஆனால், நாம் என்றேனும் நாட்டைப் பிரிக்க விரும்பவில்லை. நீங்கள் நாட்டைப் பிரிக்க வேண்டாம். ஆனால், எங்களுடைய சொல்லைக் கேளாமல் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கம் வலிபெறுமானால் அது தமிழரின் குறைகளைத் தீர்க்காததால் ஏற்படும் ஒரு விளைவேயாகும். இந்நேரத்தில், தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்கு ஏற்ப அவர்களுடைய அச்சத்தை நீக்க, ஒரு நல்ல அரசு வராவிட்டால் அப்படி ஒரு நிலை வரும் என்று சொல்லி வைக்கும் உரிமை எங்களுக்குண்டு. நாட்டின் நலன் கருதி இதை நான் சொல்ல வேண்டும். இதைப் பற்றிய விவரங்களை எனக்குப் பின்னர் பேசும் உறுப்பினர்கள் எடுத்துக் கூறுவார்கள்.

நாங்கள் துன்பப்பட்டும் எங்களுக்கு விடுதலைபெற இதுதான் ஒரேவழி என்று சொல்கின்றோம். இதைவிட வேறுவழி காட்டினால், ஒரு நல்ல முறையில்எங்களுடைய அச்சத்தை நீக்கினால், நாங்கள் இழந்திருக்கின்ற ஆட்சியுரிமையைத் தந்தால் அந்த வழியைப்பற்றி ஆராய நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம்.

### ஒத்துழைப்பினால் நன்மை கிடைக்கவில்லை!

எனக்கு முன்னர் பேசிய கௌரவ கலவான உறுப்பினர் அவர்கள் 'நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள்?' என்று எங்களைக் கேட்டார். நாங்கள் எப்பொழுதும் ஒத்துழைக்க ஆயத்தமாக இருக்கின்றோம். இதனை நான் இந்தச் சபையிலே சொல்ல வேண்டும். 'ஒருபோதும் தமிழரசுக் கட்சியினர் எங்களோடு ஒத்துழைக்க வருகின்றார்கள் இல்லை.' என்று சிங்கள உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இது பொருத்தமற்ற கூற்று; 1957 ஆம் ஆண்டிலே பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கைக்கு நாம் இசைந்தோம். அதன் பின்னர் 1960, பங்குனியிலே தங்களோடு சேர்ந்து ஆட்சி அமைக்குமாறு யூ. என். பி. கேட்டது; எங்களுக்குச் சில உரிமைகளைத் தாருங்கள் என்று சொன்னோம்; அவர்கள் மறுத்தார்கள். எனவே, 1960 ஆம் ஆண்டு பங்குனியிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்திய பெருமை எங்களுக்குரியது என்பதை நான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நண்பர்களுக்குச் சொல்கிறேன். அப்பொழுது உங்களுக்கு தோளோடு தோள் நின்று அவர்களை வீழ்த்தினோம். 1965 ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. மாவட்டசபைப் பிரமாணங்களை அப்பொழுது யூ.என்.பி. கட்சியினர் ஆக்கினார்கள். ஆனால் அதனை நிறைவேற்றவில்லை. எனவே நாங்கள் மாறுபட்டோம். [இடையீடு] இதுதான் எங்களுடைய உண்மையான சோகக்கதை. சிங்கள மக்கள் — ஆளும் கட்சியினர்—எங்களைத் தங்களுக்குப் பயன்படுத்திவிட்டுத் தூர எறிந்து விடுகின்றார்கள் வரலாற்றின் அடிப்படையிலேதான் இதைச் சொல்கின்றேன். அதனைக் கௌரவ அனுராதபுரம் உறுப்பினரும் அனுவதிக்கிறார்

1965ஆம் ஆண்டிலே ஐக்கிய தேசியக்கட்சி என்ன செய்தது? நாங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காக மாவட்டசபை தருவோம் என்று எழுத்திலே தந்தார்கள். நாங்கள் ஒத்துழைத்தோம். கௌரவ கலவான உறுப்பினர் கூறுவது போல நாம் ஒத்துழைக்கவில்லையென்று கூறுவது சரியல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு நான் ஒன்று கூறுகின்றேன்; நாங்கள் உங்களுடன் சேர்ந்து ஒத்துழைத்த காலத்தில்தான் நீங்கள் வெற்றி பெற்றிருக்கின்றீர்கள். 1956ம் ஆண்டு நீங்கள் வெற்றி பெற்றீர்கள். 1960ல் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கவில்லை. நீங்கள் தோற்றீர்கள். 1960 ஆடியிலே ஒத்துழைத்தோம். நீங்கள் வென்றீர்கள். 1965ஆம் ஆண்டுக்குப் பின் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் போராடிக்கொண்டு விலகினோம். 1970இலே நீங்கள் வென்றீர்கள்.

கே. பி. ரத்நாயக்க:—1970இல் உங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. நி. சபையில் தர்மலிங்கம்—3

# ஒரு தனித்தமிழ்நாட்டை அமைத்துக் கொள்ள தமிழர்களுக்கு உரிமையுண்டு!

## எனினும் நாட்டின் ஒருமைப்பாடு கருதியே இணைப்பரசின் கீழ் சுயாட்சி கோருகிறோம்!

வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இலங்கை இரண்டு தனித்தனி இனங்கள் வாழும் நாடாகவே இருந்து வந்திருக்கிறது. பழைய வரலாற்றுச் சுவடிகளையும் இதிகாசங்களையும் புரட்டிப் பார்த்து, இந்நாட்டில் முதலில் இருந்தவர்கள் யார்—எந்த இனத்தினர்கள்—என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்கவேண்டிய அவசியமில்லை: போர்த்துக்கீயர் இந்நாட்டில் காலடி எடுத்து வைத்த நேரத்தில் இங்கு மூன்றுக்கு மேற்பட்ட இராச்சியங்கள் இருந்தன; அதில் ஒன்று வடபகுதியில் இருந்த தமிழ இராச்சியம் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொண்டாலே போதும். தென்னிலங்கையிலிருந்த சிங்கள இராச்சியமும், தமிழ் இலங்கையிலிருந்த தமிழ் இராச்சியமும், போர்த்துக்கீயருடன் நடைபெற்ற போராட்டத்தின் பயனாக அழிந்தொழிந்தன: இந்த அரசுகள் போர்த்துக்கீயர் வசமாயின. ஆயினும் இப்பகுதிகளில் போர்த்துக்கீயரும், அவர்களுக்குப் பின்வந்த ஒல்லாந்தரும் தனித்தனி நிர்வாகத்தையே நடத்திவந்தனர். உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த ஒல்லாந்த தளபதி வடமாகாணம் முழுவதினதும் கிழக்கு மாகாணத்திலுள்ள திருமலை மாவட்டத்தையும் தனது நிர்வாகத்தின் கீழேயே வைத்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளையர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கியதாக நான் முன்பு குறிப்பிட்டேனாயினும், இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக, இலங்கையின் பல்வேறு அரசு

## 150 ஆண்டுகளுக்கு முன்புதான் இலங்கை 'ஒரே நாடு' ஆக்கப்பட்டது!

களின் எல்லைக்கோடுகளையும் சிதைத்து, இலங்கையைஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தவர்களும் அவர்களே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்நாட்டின் 2500 வருட கால வரலாற்றில் கடந்த 150 ஆண்டுகளாகவே இலங்கை 'ஒரே நாடு' ஆக இயங்கிவருகிறதென்பதையும் இந்த ஒன்றிணைப்புக்கூட நிர்ப்பந்தம் மூலமே ஏற்பட்டதென்பதையும், அதிகாரப் பிரிவினை, பிரதேச சுயாட்சி, சமஷ்டி போன்ற சொற்களைக் கண்டு அஞ்சுபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தமது நிர்வாக வசதி ஒன்றுக்காக மாத்திரம் வெள்ளைக்கார ஆட்சியினர் தமிழ் இராச்சியத்தின் எல்லைகளை சிங்கள இராச்சியத்தின் எல்லைகளுடன இணைத்தனர்; வெள்ளையர்களின் இச்செயல் அந்நியப் படையெடுப்பின் முன்னர் இருந்ததுபோன்ற சுயநிர்ணய உரிமை எமக்கு வேண்டும் என்று தமிழினம் கேட்பதை ஒருபோதும் பறித்துவிடவில்லை; பறித்துவிடவும் முடியாது. சிங்களவர்கள் பெரும்பான்மை எண்ணிக்கையினராக இருப்பதால், வெள்ளையர்களின் சப்பாத்துக்குள் புகுந்து நின்று தமிழர் மீது ஆட்சி புரிய அவர்களுக்கும் அதிகாரம் கிடையாது!

சுயாதீனமுள்ள பரிபூரண இறைமைகொண்ட ஒரு சுதந்திர தனிநாட்டை அமைத்துக்கொள்வதற்கு தமிழ் மக்களுக்குமுழு உரிமையுமுண்டு: எனினும் சனநாயகரீதியில் சிங்களவர்களுடன் சமத்துவத்தின் அடிப்படையில் ஐக்கியமாக வாழ்வதற்காக ஒரு சமஷ்டி அரசியலமைப்பினைத் தமிழ் மக்கள் கோருகிறார்கள். தமிழ் மக்கள் இந்த இலட்சியத்தில் காட்டும் உறுதி 1956ம் ஆண்டிலிருந்து அடுத்தடுத்து நடைபெற்ற ஐந்து பொதுத்தேர்தல் முடிவுகளிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது;

சிறிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து சமஷ்டி அரசியலமைப்பினை உருவாக்குவதையே சோசலிசத்தின் அடிப்படையாக எல்லா உலக சோசலிச நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இல்லாவிடில் சோசலிசம் என்பது ஹிட்லரின் 'தேசிய சோசலிசம்' போலவும் அரசாங்க முதலாளித்துவம் போலவும் மாறிவிடும்!

நாங்கள் இந்நாட்டில் சோசலிச அமைப்பை உருவாக்கும்போது ஏனைய சோசலிச நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும்: இப்படிப் பின்பற்றுவதில் தவறு ஏதுமில்லை.

மார்க்சீயமும், தேசியப் பிரச்சினைகளும்பற்றி 1913ம் ஆண்டு ஸ்டாலின் எழுதிய அறிக்கையிலே பின்வருமாறு கூறுகிறார்:

''சுயநிர்ணய உரிமை என்றால் அர்த்தம் என்ன? ஒரு இனம் தனது வழியை தானே தெரிவு செய்யும் உரிமையே அது: ஒரு இனத்தின் வாழ்வில் குறுக்கிடுவதற்கும் அந்த இனத்தின் பாடசாலைகளையும், மற்றும் கல்விக்கூடங்களையும் அழிப்பதற்கும், அந்த இனத்தின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் அழிப்பதற்கும், அந்த இனத்தின் மொழியை நசுக்கவும், அம்மொழியின் உரிமைகளை கட்டுப்படுத்தவும், வேறு யாருக்கும் அதிகாரம் கிடையாது.'',

சுயநிர்ணய உரிமை என்றால், ஒரு இனம் தான் விரும்பிய படியே தனது அலுவல்களைக் கவனிக்கும் உரிமையாகும். இனம் என்றால், என்ன? இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் ஒரு இனம் என்ற கட்டுக்கோப்புக்குள் வருகிறார்களா என்ற கேள்வி இப்போது எழுகிறது. நான் முன்பு கூறியதுபோல — இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தனி இனமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நாங்கள் எங்கள் மன்னர்களாலேயே ஆளப்பட்டிருக்கிறோம். நாங்கள் எங்கள் சொந்த மொழியிலேயே பேசுகிறோம்; நாங்கள் எங்களுக்கென்று எல்லைக் கோடுகளைக் கொண்ட தனி அரசின் கீழ் வாழ்ந்திருக்கிறோம். எங்களுக்கென்று தனி வரலாறு இருக்கிறது. எங்களுக்கு என தனியான மரபுகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் இருக்கின்றன.

''இனம்'' என்பதற்கு லெனின்தரும் சோசலிச விளக்கத்தின் படிகூட, நாங்கள் இந்நாட்டில் ஓர் தனி இனமாகவே இருக்கிறோம். இந்நாட்டில் வாழும் தனித்துவமுடைய வேறுபட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாகிய எங்களுக்கு, எமது எதிர்காலத்தை பற்றி நாமே முடிவு செய்து எங்கள் விருப்பப்படியே எமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள பூரண உரிமையுண்டு. இது பிரதேச சுயாட்சி அடிப்படையில் இருக்கலாம்; சமஷ்டி அமைப்பு அடிப்படையில் இருக்கலாம்; அல்லது பரிபூரண பிரிவினை அடிப்படையிலும் அமையலாம்!

தொடர்ச்சியாகவந்த ஐந்து பொதுத்தேர்தல் முடிவுகளின் மூலமும் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் சிங்களவர்களுடன் ஒன்றுபட்டு வாழத்தயாராக இருக்கிறோம் என்பதை தெளிவாக பிரகடனப் படுத்தி விட்டோம். தமிழ் மக்களின் இந்த சட்ட பூர்வமான அபிலாஷையை மதிக்க வேண்டியது ஒவ்வொரு சோசலிச வாதியின் கடமையுமாகும். லெனின் கூறியதுபோல—இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று இன, மொழி சமத்துவத்துக்காக வாதாட முன்வராத ஒருவர் இன ஒடுக்குதல்களையோ, சமத்துவமின்மையையோ எதிர்த்து வாதாட முடியாது. அப்படிப்பட்டவர் ஒரு மார்க்சிஸ்டோ அல்லது ஜனநாயக வாதியோ அல்ல!

சமஷ்டி அரசியலமைப்பு என்பது இந்த நாட்டைப் பிரித்துவிடுமென்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சி நாட்டைப் பிரித்துவிடத் திட்டம் போடுகிறதென்றும் இந்நாட்டில் பலர் நினைக்கிறார்கள். இதைவிட தவறான எண்ணம் வேறு இருக்கமுடியாது: இன்று தமிழ்ப்பகுதியில் திருவாளர்கள் சுந்தரலிங்கம், வி. நவரத்தினம் போன்றோர் தலைமையில் பிரிவினை கோரும் இயக்கமொன்று உருவாகியிருக்கிறது. இந்நாட்டில் தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழவேண்டியிருப்பின் அவர்கள் தங்களுக்கென தனி நாடு ஒன்று உருவாகவேண்டுமென்ற கருத்தை அவர்கள் பரப்பி வருகிறார்கள். தென்னிலங்கையில் சகல கட்சிகளும்—மார்க்சிஸ்ட் கட்சிகளும் உட்பட—ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றன. இந்த ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம் என்ற அரசியல் கோட்பாடு நாட்டுப்பிரிவினைக்கே வழிவகுக்குமல்லாது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஒருபோதும் விதிடாது:

கடவுள் விரும்பியிருந்தால் இலங்கையில் உள்ள அனைவரையும் ஒரே இனத்தினராகப் படைத்திருக்கலாம்; அவர் விரும்பியிருந்தால் இலங்கையர் எல்லோரும் ஒரே மொழி பேசுபவராக

(10-ம் பக்கம் பார்க்க)

## வாசகர் நறுக்கு

அன்புள்ள ஆசிரியர்க்கு:

சோம்பிக் கிடக்கும் தமிழினத்தை தட்டி எழுப்பி, எட்டப்பர்களை எரியும் தீயிலிட்டு தமிழன் தன்மானம் காக்கும்போருக்கு தயாராக்கும் பணியில் நீங்கள் ஈடுபட்டு இருக்கும் இவ்வேளையில் தமிழரசுப் பா. உ.க்கள், தமிழ் மக்கள் சுமத்தியுள்ள நம்பிக்கைக்கும், பொறுப்புக்கும் பாதகமான, வெறுக்கக்கூடிய ''ஏனோதானோ'' என்ற போக்கில் நடந்துகொண்டதை வன்மையாகக் கண்டித்து கண்களைத் திறக்கச் செய்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற செவ்விய செயல் வழிக்கு அவர்களைத் தள்ளிவிடும் நோக்குடன் சென்ற வாரம் நீங்கள் தீட்டிய ''எண்ணம'' கண்டு களிகொண்டேன். நக்கீரன் வழி வந்தோனே வாழி நீடூழி. வளர்க உன் தீரப் பணி.

—வீ. அ. நாயகம்,
வெள்ளவத்தை.

O

ஆசிரியர் அவர்களுக்கு:-

2-4-71 சுதந்திரன் இதழ் 'எண்ணம்' படித்தேன். என்ன இருந்தாலும் தாங்கள் தமிழரசுக்கட்சி எம். பீ.க்களை நேரடியாகக் கண்டித்திருக்கலாம்; இப்படிப் பத்திரிகையில் கண்டித்து எழுதியிருக்கக் கூடாது.

—எஸ். தர்மலிங்கம்.
யாழ்ப்பாணம்

O

அன்பின் கோவை அண்ணவுக்கு:-

நான் ஓர் சுதந்திரன் பிரியன்; 2-4-71 சுதந்திரன் இதழில் எண்ணம் என்ற பகுதியில் தமிழரசு எம். பீ.க்கள் எங்கே? என்ற தலைப்பில் தமிழரசு எம். பீ.க்கள் விட்ட பிழையை எடுத்துக்கூறியிருந்தீர்கள். உங்களதுபத்திரிகைதமிழரசுக் கட்சியை ஆதரித்தும்கூட அவர்கள் விட்ட பிழையை உடனே எடுத்துக்கூறியிருந்தீர்கள். வேறு எந்த ஒரு பத்திரிகைஆசிரியனும்ஒருகட்சியின் சார்பில்தான் பத்திரிகை நடத்திவந்தால் அந்தக் கட்சியைச் சேர்ந்த எம். பீ.க்கள் விட்ட பிழையை ஒருபோதும் எடுத்துக்கூறமாட்டான்; உண்மையாக நீங்கள்தான் ஈழத்துப் பத்திரிகை ஆசிரியர்களுள் சிறந்தவர் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்;

—தா. தா. சத்தியமூர்த்தி.
கரவெட்டி.

O

அன்பார்ந்த ஆசிரியர் அவர்கட்கு,

ஈழத்தமிழினத்தின் விடுதலை ஏடாக, ஏறுபோல் பீடு நடைபோடும் சுதந்திரனைக் காணுகின்றபோது களிப்படைகிறேன்: உணர்ச்சியூட்டும் தங்களுடைய எழுத்துக்கள் தமிழினத்தை எழுச்சிகொள்ளச் செய்கின்றது.

இவ்வாரத்திய சுதந்திரனில் தாங்கள் தீட்டியிருந்த அரசியல் மடலும் 'எண்ணம்' பகுதியும் இதுவரை தாங்கள் எழுதிய எழுத்துக்கெல்லாம் சிகரமாக அமைந்துவிட்டதாக நான் கருதுகிறேன்.

அரசியல் மடலைப் படிக்கின்றபோது என்னுளே உணர்ச்சியலைகள் மோதுகின்றன. ஈழத்தமிழகத்தைக்காண உளம் துடிக்கிறது! உவகை பொங்குகிறது.

தங்களுடைய எழுத்துகளுக்கு விடுதலை உணர்வூட்டும் வலுவுண்டு; தமிழினத்தை விழித்தெழச் செய்கின்ற சக்தியுண்டு.

வாழ்க! நீவிர் பல்லாண்டு;
வளர்க! தங்கள் சேவை.

—சு. சண்முகவடிவேல்.
வவுனியா.

O

சுதந்திரன் மூலம் தமிழ் மக்களுக்கு
விடுதலை உணர்வூட்டும் ஆசிரியருக்கு:-

பல்லாயிரக் கணக்கான சுதந்திரன் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். தாங்கள் எழுதிவரும் அரசியல் மடல் பகைவருக்கு எய்யப்படும் விஷம் தோய்ந்த அம்புகள். வெளியாகும் ஒவ்வொரு சுதந்திரன் இதழும் தமிழ் உலகில் சுடர்விட்டு பிரகாசிக்கும் நட்சத்திரங்கள். தரப்படுத்தல் என்னும் போர்வையின்கீழ் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்க ஒன்று திரண்டு அணிவகுத்து நிற்கின்றது தமிழ் மாணவர் படை! வாழ்க. சுதந்திரன், வளரட்டும் உங்கள் பணி.

ட. வீரசிங்கம்.
தமிழ் மாணவர் மன்றம், வத்தளை

## என்றே ஒருநாள் சமஷ்டி ஏற்பட்டே தீரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "முற்போக்கு போர்வையின் கீழ் தமிழுக்கு உலைவைக்கபடுமானால்

# தி. மு. கழகம் பதவிகளை தூக்கியெறிந்து விட்டு இந்தி எதிர்ப்பு போர்க்களத்தில் குதிக்கும்!"

"முற்போக்குத் திட்டங்கள் என்ற போர்வையின் கீழ் தமிழர்களின் உரிமைக்கு டெல்லி அரசு உலை வைக்க முயற்சித்தால்—தமிழ்மொழி அழிவிற்கு ஏதாவது அடையாளம் தெரியுமானால் பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு தி. மு. கழகம் மீண்டும் இந்தி எதிர்ப்பு போர்க்களத்தில் குதிக்கும்."

இவ்வாறு திருவாரூரில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசிய தமிழக முதல்வரும் தி. மு. கழகத் தலைவருமான கலைஞர் கருணாநிதி எச்சரித்துள்ளார்:

கலைஞர் தமது பேச்சில் கூறியுள்ளதாவது:—

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மக்கள் அளித்த தீர்ப்பு தி.மு. கழகத்துக்குப் புதிய வலிவை ஏற்றியிருக்கிறது. அகில உலகிலும் கழகத்திற்கு புதிய செல்வாக்கை உருவாக்கி இருக்கிறது.

எனினும் நாம் சந்திக்க வேண்டிய பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைக் கோடிட்டுக் காட்ட முடியும்.

## தமிழக முதல்வர் கருணாநிதி கடுமையான எச்சரிக்கை!

### இந்தி வெறியர்கள்

புதிய பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்தநேரத்தில் இடைக்கால சபாநாயகராக இருந்த சேத் கோவிந்ததாஸ் என்பவர் பல்வேறு தாய் மொழிகளைக் கொண்டவர்கள் சபை-பாராளுமன்றம் என்பதை மறந்து "இனி மேல் சபையின் எல்லா நடவடிக்கைகளும் இந்தியில் நடைபெறும்" என்று நம்புவதாக பேசியிருக்கிறார். இந்தியிலும் பேசியிருக்கிறார்:


இந்தச்செய்தியை பத்திரிகையின் வாயிலாக அறிந்த நாம் - இவ்வளவு பெரிய இந்தி வெறியர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதை உணருகிறோம்:

### மக்கள் நம்பிக்கை

முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றக்கூடியவர் என்று நம்பி மிகப்பெரும் தலைவியாக இந்திரா காந்தியை மக்கள் தேர்தெடுத்துள்ளனர்: பிற்போக்கு சக்தி அவரை ஆட்டி வைக்க முயன்றாலும் முகிலைக்கிழித்து வெளிவரும் முழுநிலவுபோல் முற்போக்கு எண்ணம் வெற்றிபெறும் என நாம் நம்புகிறோம்.

ஆயினும், தமிழகத்தை பொறுத்தவரை எந்த மொழிப்போராட்டத்தை நடத்தி முப்பதாண்டு கால தியாக வரலாற்றினைப் பெற்றிருக்கிறோமோ, அந்தப் போராட்டத்தில் பலரைப் பலி தந்து சித்திரவதைகளைத் தாங்கி வீர சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறோமோ அதையெல்லாம் மறந்துவிட்டு செயல்படமாட்டோம் என்பதை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்:

இந்திரா காந்தியார் பிற்போக்கு சக்திகளுக்கு செவிசாய்க்கமாட்டார் என்று நம்புகிறோம். ஆட்டிப்படைக்கும் நிலைக்கு இந்தி வெறியர்களுக்கு அவர் அடிபணிய



மாட்டார் என்று நம்புகிறோம்:

அதைப் போலவே நாமும் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதில்எப்போதும் தயக்கம் காட்டமாட்டோம்.

அதனால்தான் முன்பும்கூறினேன்; இப்போதும் கூறு

(11-ம் பக்கம் பார்க்க)

---

### அத்தியாயம் (11)

# தத்தை விடு தூது

அன்று காலையிலிருந்து மழை சோனாவாரியாகப் பெய்து கொண்டிருந்தது. மழை பெய்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் சரவணன். அவன் கண்கள் பூமியில் பதிகின்றன: மழை பரவலாக வெள்ளமிட்டு நிற்க அதிலே தோன்றும் நீர்க் குமிழிகளைப் பார்த்து அவன் அதரங்களில் ஒரு விரக்திப் புன்னகை மலர்கிறது. ஒருவேளை வாழ்க்கையே நீர்க் குமிழி என்று நினைத்து விட்டானோ? அந்தத் தத்துவம் அவனுக்குப் புரிந்ததோ புரியவில்லையோ தெரியாது. ஆனால் அவனுக்குச் சற்றுத் தூரத்தில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த கனகசுந்தரனுக்குப் புரிந்துதான் இருந்தது.

வெவ்வேறு உலகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இருவரது சிந்தனையையும் கலைப்பது போல் தெருக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்கிறது. இருவரும் ஏக காலத்தில் நிமிர்ந்து பார்க்கின்றனர். அங்கே பொன்னையா ஒட்டைக் குடையொன்றில் வந்து கொண்டிருக்கிறார். இந்தக் கொட்டும் மழையில் அவர் வருவதாக இருந்தால் ஏதாவது விசேடமான செய்தி இருக்க வேண்டும். என்று நினைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு எழுந்து உட்பக்கம் செல்கிறான் கனகசுந்தரம் சரவணனின் முன்னிலையில் அவரோடு மனம் விட்டுப் பேசமுடியாது என்ற பயம் அவனுக்கு.

சரவணன் எதிலுமே பற்றற்றவன் போல் ஒட்டைக் குடையில் வரும் பொன்னையாவையே பார்த்தபடி இருக்கிறான். அந்த ஒட்டைக் குடை அவன் மனதில் பழைய சம்பவம் ஒன்றைக் கிளறி விடுகிறது. அப்போதும் ஒரு நாள் இப்படித் தான் மழை கொட்டிக் கொண்டிருந்தது. அன்று முழு நாளும் சிவகாமி அவன் வீட்டுக்கு வரவில்லை. அதற்கு மேலும் அவனால் பொறுக்க முடியவில்லை. தனது தந்தையின் ஒட்டைக் குடையை எடுத்துக் கொண்டு சிவகாமி வீட்டுக்குப் புறப்பட்டு விடுகிறான். அவனது தாயார் அவனைப் பல முறை அழைத்தும் அவன் திரும்பிப் பார்க்காமலே சென்று விடுகிறான்.

அவன் ஒட்டைக் குடையோடு தன் வீடு நோக்கி வருவதைக் கண்ட சிவகாமி கைகொட்டி அவனைக் கேலி செய்கிறாள். ஒட்டைக் குடை ஒய்... ஒட்டைக்குடை அவள் போட்ட சத்தம் மழையின் சத்தத்தை விடப் பலமாகக் கேட்கிறது:

இந்த ஒட்டைக்குடையின் உதவியினால்தான் உன்னைப் பார்க்க வந்தனான்......அதுக்குள்ள நீ என்னைக் கேலிசெய்கிறாயே...உனக்கென்ன ......? பணக்காரப் பிள்ளை......நாங்கள் ஏழைகள்தானே. அவன் குரலில் ஆற்றாமை இழையோடுகிறது. உடலில் ஒரு பக்கம் நனைந்திருக்கத் தலையில் இருந்து நீர் சொட்டச் சொட்ட அவன் சிவகாமி வீட்டுத் திண்ணைப்படியில் ஏறிக் கொள்கிறான். ஒட்டைக் குடையை மடித்து ஒரு மூலையில் வைத்துவிட்டு அவன் சுற்றுப்புறத்தை ஒரு நோட்டம் விடுகிறான். அங்கே வேறு யாருமில்லையெனக் கண்டதும் ஒரு நாற்காலியில் அமர்ந்து சிவகாமியை முறைத்துப் பார்க்கிறான்.

அடேயப்பா...நான் ஏதோ ஆசையோடு கேலி செய்ய உங்களுக்குக் கோபம் வந்திட்டுதாக்கும். என் ஆசை அத்தான் இல்லையா...?கூறிக் கொண்டே அவள் அவனை அன்போடு பார்க்கிறாள். அப்போது பார்த்துக் குடை படாரெனக்கீழே விழுகிறது. சிவகாமி ஓடிச்சென்று விழுந்த குடையை எடுத்து வைக்கிறாள்.

விடு சிவகாமி [illegible] குடையை நீ தொடக்கூடாது. என்னுடைய ஒட்டைக் குடை என்னுடனேயே இருக்கட்டும். அவன் கோபந் தீராமல் பதிலளிக்கிறான்:

ஒட்டைக்குடை உங்களின் உடமையென்றால் அது எனக்கும் சொந்தம்தானே. பெரிய கோபம் வந்திட்டுது என்ர குட்டி அத்தானல்ல! சிரியுங்கள்...உம்... ஒருமுறை ஒரேயொருமுறை மட்டும் சிரியுங்கள். நீங்கள் சிரிக்காட்டி நான் அழுவன். அவள் கூறி முடிக்கவில்லை அவன் சிரித்துவிடுகிறான்; அவனுடன் கூடச் சேர்ந்து அவளும் சிரிக்க அந்த வீடே அவர்கள் சத்தத்தில் அதிர்கிறது. இந்த நினைவு சரவணனின் உள்ளத்திற் புத்துயிர் பெறுகிறது.

தம்பி, இன்றைக்குக் காலையில சிவகாமியைக் கண்டனான் பொன்னையா மிகவும் மெதுவாகக் கனகசுந்தரனுக்கு மட்டுங் கேட்கும்படியாகக் கூறுகிறார். ஆனால் சரவணனும் தன் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு அந்த சம்பாஷணையைத்தான் கேட்கிறான் என்பது அவருக்கோ கனகசுந்தரனுக்கோ தெரியாது. தெரிந்திருக்க நியாயமுமில்லை.

### திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கம்

"உண்மையாகவா! என்று தன் கேள்வியில் ஆச்சரியந் தொனிக்கக் கேட்கிறான் கனகசுந்தரம்.

பின்ன என்ன? பொய் சொல்றன் என்று நினைத் [illegible] அவளைக்கண்டனான். முத்துக் குமரனைத் திருமணஞ்செய்து கொள்ள விருப்பமா என்று கேட்டன்: விருப்பமோ விருப்பமில்லையோ தன் தந்தையின் ஆணையைத் தட்ட முடியாமல் இருக்காம் என்று கூறிக் கண்ணீர் விட்டது. அதைப்பார்த்த எனக்கும் கண்ணில் 'பொல பொல' என்று கண்ணீர் வடியத் தொடங்கிவிட்டது: நான் பின்ன வேறொன்றும் பேசாமற் திரும்பி விட்டன் என்று அவர் கூறிமுடிந்தபோது சரவணனின் உள்ளம் கொதித்தது. அந்தக் கொதிப்பு ஒரு கவிதையாக மலர்கிறது.

தந்தைதா யார் மகட்குத்
தலைவற் றெரிவரெனும்

இந்த மொழிக்
கியாது ரைப்பா
யென்னிலிவர்தாம் வேண்டும்

அந்த மகன் றன்னைமக
ளந்தோ விரும்பிலளேல்

தந்தைதா யார்க்கென்னந்
தவிப்ப தவனன்றோ

சார்ந்து நீ தோகையிடஞ்
சாற்றுதியாற் பைங்கிளியே.

அதே நேரத்தில் அவன் உள்ளம் பலதையும் சிந்திக்கிறது; ஒரு ஆண்மகன் சிவகாமியைப் போல் மூடத்தனமாக நடந்துகொள்ள மாட்டான். அவனைப் பார்த்து அவனது பெற்றோர்கள் நீ இன்னாரைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தால் கண்டிப்பாக அவன் திருமணம் செய்துகொள்ளப் போவது நானா நீங்களா எனக் கேட்டே இருப்பான்: சிவகாமிக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு துணிவு ஏற்பட மாட்டேன் என்கிறது. சிவகாமிக்கு மட்டுந்தான் இந்தத் துணிவில்லையா அல்லது பெண்களாகப் பிறந்த அதினைபேருக்குமே துணிவில்லையா...? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறான்.

மழை இடைவிடாமற் பெய்து கொண்டே இருக்கிறது. பொன்னையா கனகசுந்தரனுடன் ஏதோ பேசிவிட்டுத் திரும்பிச் செல்கிறார். சரவணன் அவர் ஏன் வந்தார் என்று கூடக்கவனிக்காமல் தன் சிந்தனையிலேயே ஈடுபட்டிருக்கிறான்: கனகசுந்தரம் அவனைக் குழப்பாமல் தன்பாட்டுக்கே போய் அமர்ந்து கொள்கிறான்.

சிவகாமியின் கோழைத்தனத்தை நினைக்க நினைக்க அவன் உள்ளங் கொதிக்கிறது, சீ! இவ்வளவு அடிமைத்தனமான வாழ்க்கை வாழ்வதைவிட இறந்து விடுவது எவ்வளவோ தேவலை என மனதிற்குட் பொருமிக் கொள்கிறான். சிவகாமி கொஞ்சந் துணிவு பெற்று உன் பெற்றோரிடம் முத்துக் குமரனைத் திருமணஞ் செய்து கொள்ள முடியாது என்று கூறிவிடு. அதனால் இருவரின் வாழ்வை மலர்வித்த பெருமை உன்னைச் சாரும். என்று தனக்குள்ளேயே பேசிக் கொள்கிறான். அந்த நிலையில் அதைக் கவிதையாகப் பாடவேண்டும் என்ற எண்ணம் உதிக்கிறது அவனுக்கு நினைத்தவுடன் கவிதைபாட முடிகிறதா...? அப்படியே சிறிது நேரம் அமர்ந்திருந்து சிந்தித்து விட்டுப் பாடத் தொடங்குகிறான்.

தந்தை யொருவன் மகற்குத்
தான் விரும்பு மோர் மகளை

மைந்த மணவெனலும்
மைந்தன் வணங்கி யெழுந்

தெந்தாயான் வேண்டே
னிவளை விரும்புதியேல்

தந்தாய் மணத்தியெனச்
சாற்றினனென்
றேயுரைப்பர்

தையலிட மிக்கதை நீ
சாற்றுதியாற் பைங்கிளியே.

கவிதையைத் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டே எழுந்து உள்ளே செல்கிறான் சரவணன். அவன் உள்ளத்தில் அமைதியில்லை... சிந்தனைக்கு இடமிருக்கவில்லை. அப்போது அது வெறும் சூன்யமாகவேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்கள் சிங்களத் தலைவர்களை உதறித் தள்ள முன்வர வேண்டும்!

## மலையகத்திலே.......

## வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களுடன் கை கோர்த்து முன்னேறுவோம்!

## தமிழ் மொழியும் இனமும் வாழ இதுவே வழி!

கிளுக்கொல்லைதோட்டத்தில் 1970ம் ஆண்டு செப்டெம்பர் முதலாந் திகதி பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இராமையா, அழகர்சாமி ஆகிய இரு தொழிலாளர்கள் இரையானது தெரிந்த விடயம். இவ்விரு தொழிலாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டு, பதுளை நகரசபையின் குப்பையள்ளும் வண்டியில் எடுத்துச்செல்லப்பட்டு, அனாதைகள்போல புதைக்கப்பட்டமை அறிந்து மனங் குமுறாத தமிழ் மகனில்லை.

இறந்த இரு தொழிலாளர்களில் ஒருவர் ஐ. தொ. கா. வின் முக்கிய உறுப்பினர். மேற்படி தொழிலாளர் இறப்புப் பற்றி நியமன உறுப்பினர் திரு. அஸீஸ் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டும் திரு. அஸீஸ் இது விடயத்தில் உடன் சிரத்தை எடுக்கவில்லை. இறந்தவர்களின் உடல்களைத் தானும் எடுத்துக் கொடுக்கும் முயற்சியில் திரு. அஸீஸ் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதே இடத்தில் ஒரு விடயத்தை நினைவுகூர வேண்டியுள்ளது.

செருசலத்திலுள்ள முஸ்லீம் பள்ளிவாசல் தீவைக்கப்பட்டது சம்பந்தமாக அங்கு நடத்தப்பட்ட இஸ்ரேல் எதிர்ப்பு ஊர்வலத்தில் திரு. அஸீஸ் அவர்கள் விமான மூலம் சென்றுகலந்து கொண்டார். இப்படி எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இடத்திற்குப் பறந்து சென்றவர் நூற்றைம்பது மைல்கள்கூட இல்லாத (கொழும்பிலிருந்து) கிளுக்கொல்லைக்கு ஏன் வரமுடியாது? இப்படி யான் மட்டும் கேட்கவில்லை. இலட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். இதற்காக, திரு. அஸீஸ் அவர்களின் மதாபிமானத்தை எவரும் பழித்ததாகக்கொள்ளக்கூடாது. அவரது அலட்சிய மனப்பாங்கையே மக்கள் (மலைநாட்டுத் தமிழ் மக்கள்) சுத்திக்காட்டுகிறார்கள்.

கிளுக்கொல்லையில் இரண்டு தொழிலாளர் இறப்பதற்குக் காரணம். இலங்கை—தொழிலாளர் காங்கிரஸ் தான். இ. தொ. கா. வேலை நிறுத்தத்திலிருந்த தனது உறுப்பினர் நூறு பேரை உடன் வேலைக்குப்போகும்படி தூண்டவே மற்றய போராட்டச் சங்கங்கள் இதை எதிர்த்தனர். இதனால் பொலிஸ் — தொழிலாளர் மோதல் ஏற்பட்டு இருவர் மாண்டனர். இரண்டுபேர் இறப்பதற்குப் பொறுப்பாளியான இ. தொ. கா. பின்பு இறந்தவர்களுக்காக அனுதாபம் தெரிவித்து இந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையிலும் போட்டுக் கொண்டது.

கிளுக்கொல்லையில் தொழிலாளர்கள் அமைதியாகப் பேராட்டம் நடாத்தாமைக்குக் காரணம் திரு. சண்முகதாசனின் சீனக் கம்யூனிஸ்டுகளின் தூண்டுதல் தான். தோட்டத்துரை பங்களா மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றைத் தாக்குமாறு பலாத்காரப் புரட்சியைத் திரு. சண்முகதாசன் குழுவினர் கிளுக்கொல்லையில் ஏற்படுத்தினர். பின்பு பொலிஸ்-தொழிலாளர் மோதல் ஏற்பட்டு இருவர் மாண்டதோடு தோட்டத் தொழிலாளர்கள் போலிஸாரின் அடிதடிக்குப் பயந்து மறைந்துதிரிந்த போது திரு. சண்முகதாசனும் அவரது புரட்சிவாதிகளும் தொழிலாளரை நட்டாற்றில் விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இவர்களுக்காகப் போராடப் போய்த் தொழிலாளர் மாண்டது தான் மிச்சம். இந்த வீரக் கம்யூனிஸ்டுகள் பின்னால் பதுளையில் பொங்கலன்று ராமையா — அழகர்சாமி அரங்கமைத்துக் கூட்டம் போட்டார்களாம்.

அண்மையில் நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் இருபத்தேழாவது மகாநாட்டில் திரு. என். எம். பெரேரா "இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஏனைய முதலாளித்துவ கட்சிகளும் தொழிலாளரை முதலாளித்துவத்திற்கு அடிமையாக்கப் பார்க்கிறார்கள். இவர்களை எதிர்த்துப் போராட நாம் தயாராகவுள்ளோம்..." என்று பேசியுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைத் தாக்க இவருக்கென்ன அருகதையுண்டு? இ. தொ. கா. தலைவர் தொண்டமான் ஒரு தமிழன் அவருக்குக்கீழ் பல லட்சம் தமிழ் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர் மலையகத் தமிழ் தொழிலாளரைக் காட்டிக்கொடுத்திருக்கலாம். ஆனால் அவர் பல சலுகைகளைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார். அவரைத் தாக்க என். எம்.மிற்கு என்ன யோக்கியதையுண்டு?

ஆனால் இப்படி ஒரு தமிழ் தலைவனை சிங்களத் தலைவர் ஒருவர் இட்டிய குரலுக்குத் தமிழ் தொழிலாளரே ஜே!" போட்டார்களென்றால் இந்தக்கண்றாவியை என்னென்று சொல்வது?

இனியும் மலையகத் தொழிலாளர்கள் உறங்கக்கூடாது. தமிழ் மொழியையும் தமிழரையும் ஈழத்தில் அழித்திட நடவடிக்கை எடுக்கும் சிங்கள அரசாங்கத்தின் புதிய அரசியல் திட்ட ஆலோசகர்கள் சமசமாஜக்காரர்கள் தான். இதை அறிந்த பின்பும் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் சமசமாஜக் கட்சியிலிருக்கலாமா? நம்மையும் நம் மொழியினையும் அழித்திட முயலும் வெறியர்கள் தலைமையாளும் கட்சியில் இனியும் மலையகத் தொழிலாளர்கள் அடிமைபோலிருத்தலாகாது. மலையகத் தமிழரிடம் சந்தாவைப் பிச்சையெடுக்கும் சமசமாஜக் கட்சியைத் தமிழர்கள் மலையகத்திலிருந்து விரட்டவேண்டும்.

தேர்தலுக்கு முன்பு சிறிமாவோ அம்மையார் "மலையகத் தமிழர்கள் இந்நாட்டிற்கு நிறைய உழைத்துள்ளார்கள். இந்தியா திரும்பும் அவர்கள் விரும்பியதை எடுத்துச்செல்ல நாங்கள் உதவி செய்வோம்..." என்று பிரசங்கம் செய்தார். ஆனால் இவர் ஆட்சிக்குவந்த பின் எடுத்த நடவடிக்கைகளைக் கேளுங்கள்.

இந்தியா செல்லும் தமிழர்கள் தமிழகத்திலிருக்கும் தங்கள் உறவினரோடு கடிதத் தொடர்புகொள்ள முற்பட்டதும் அம்மையார் ஐம்பது சதத்திலிருந்த விமானக் கடிதத்தை எண்பது சதத்திற்கும் சாதாரணக் கடிதத்தை ஒரு ரூபா பத்து சதத்திற்கும் உயர்த்தினார். ரயில் டிக்கெட் விலையையும் உயர்த்தினார். தொழிலாளர்கள் தாயகம் கொண்டுசெல்லும் பொருட்களுக்குக் கட்டுப்பாடு விதித்தார். மேலும் பொதிகளுக்கு விலையையும் உயர்த்தினார். ரயில்வே ஊழி

**'சுகி'**

யர்கள் தாயகம் திரும்புவோரின் பொருட்களைப் போட்டு உடைப்பதற்கும் அவர்களிடமிருந்து கைலஞ்சம் வாங்குவதற்கும் தாராளமாக அதிகாரங் கொடுத்தார். இன்னும் பல பல. இத்தனையும் செய்துவிட்டு—செய்துகொண்டு தோட்டத் தொழிலாளரிடையேயும் சோசலிசம் பேசுகிறார் இவர்.

இவற்றையெல்லாம் உணர்ந்து மலையகத் தமிழர்கள் தங்கள் வழியை மாற்றி அமைத்தல் வேண்டும். இலங்கையின் வடகிழக்குத் தமிழரோடு மலையகத் தமிழரை இணையாது தடுத்தது—தடுத்துக்கொண்டிருப்பது மலை

(11ம் பக்கம் பார்க்க)

---

# மலைநாட்டுத் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் தலைமை தாங்கலாமா?

இன்று மலையகத்தில் உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றை இம்மியளவேனும் பெறமுடியாமல் சிலந்திவலையினுட் சிக்குண்ட பூச்சி வெளியேறமுடியாமல் திண்டாடுவதுபோல் தொழிற் சங்கம் என்னும் வலைக்குள் தோட்டத்தொழிலாளர்களும் அகப்பட்டு வெளியேறமுடியாமல் தவிக்கின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தில் 65 வீதம் இலாபத்தைப் பெற்றுத்தரும் தொழிலாளர்களின் வாழ்வை எண்ணும்போது நெஞ்சம் குமுறுகின்றது.

அரசியல் கட்சிகளின் அனுபவமோ, அரசியல் அறிவோ அற்ற தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தைத் தவிர வேறு ஒரு இயக்கத்தைப் பற்றியும் அறியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

மலையகத்தில் இன்று இரண்டு முக்கிய தொழிற் சங்கங்கள் இருந்து வருகின்றன. ஒன்று திரு. எஸ். தொண்டமான் அவர்களை ஆயுட்தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். மற்றது ஜனாப். ஏ. அசீஸ் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ். மற்றும் பல தொழிற் சங்கங்கள் இருக்கின்றன ஆனால் முக்கியத்துவம் பெறவில்லை.

குறிப்பிட்ட இவ்விரு தொழிற்சங்கங்களும் பல வருடங்கள் அனுபவப் பட்டவை. ஆனால் தொழிலாளர்களுக்கு உழைப்பவை என்று கூறமுடியாது. அதற்கு அதன் தலைவர்களையே உதாரணமாய்க் கூறவேண்டும். இங்கு ஒரு பிரச்சினையை முன்நோக்க வேண்டும். அதாவது தொழிற் சங்க இயக்கத்துக்கு யார் தலைவராய் இருக்கவேண்டும், இருக்கமுடியும்? பல லட்சரூபாவுக்கு அதிபதியாய் இருக்கும் முதலாளியா? அல்லது தொழிலாளர் வர்க்கத்திலே இருந்து எழும்பிய ஒரு தொழிலாளியா தலைமைப் பதவியில் இருக்க வேண்டியவர்?

**எம். பி. துரை**
**(தலவாக்கொல்லை)**

மலைநாட்டில் இருக்கும் இரண்டு முக்கிய தொழிற் சங்கங்களின் தலைவர்களும் முதலாளிகள். திரு. தொண்டமான் அவர்களும் முதலாளி திரு. அசீஸ் அவர்களும் முதலாளி. இவர்கள் இருவரும் தொழிலாளர் இயக்கத்துக்கு எப்படித் தலைவர்களாய் இருக்க முடியும்? தெளிந்த சிந்தையும் அறிவும் பெற்ற தொழிலாளர்கள் எந்த ஒரு முதலாளியையும் தங்களின் தலைவர்களாய் ஏற்றுக் கொள்வார்களா? மேற் கூறிய இவ்விரு தலைவர்களும் சம்பள நிர்ணய சபையில் தொழிலாளர்களுக்காக வாதாடுவார்களா? முதலாளிகளுக்கா வாதாடுவார்களா? முதலாளிகளாகவுள்ள அத்தலைவர்கள் நிச்சயம் தொழிலாளர்களுக்கு வாதாட மாட்டார்கள் என்பது திண்ணம்.

நிலை இப்படியிருக்க "தொழிலாளருக்காக நாங்கள் எதையும் செய்யத் தயார்" என்று இத்தலைவர்கள் கூப்பாடு போடுவது மலையகத் தொழிலாளர்களை ஏமாற்றும் வஞ்சக வித்தையோ?

எனவே இனியாவது மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் எதிர்கால வாழ்வை வளம் பெறச் செய்யவேண்டுமென்றால் தங்களின் குழந்தைகள் எதிர்காலத்தில் செழிப்போடு இந்த நாட்டில் எல்லா உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என்று கருதினால், இன்று மலையகத்தில் கலை, கலாச்சார சமூக பொருளாதார ஆக்கபூர்வமான திட்டங்களின்றி இயங்கிவரும் தொழிற்சங்கங்களை மாற்றியமைப்பதோடு பதவி வகிக்கும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாய் இருக்க அருகதையற்ற முதலாளித் தலைவர்களையும் தொழிலாளர்களின் பிடிப்பிலிருந்து அகற்ற வேண்டும். தொழிலாளர்களுக்கு தொழிலாளியே தலைவராய் இருக்க ஆக்கபூர்வமான திட்டமிட்டு செயற்படவேண்டும். இல்லையேல் "யார் யாருக்குத் தலைவனாக இருப்பது?" என்ற கேள்வியை தொழிலாளர்களைப் பார்த்து மாத்திரம் கேட்கும்படிதான் இருக்கும்.

---

# 'கை'க்கு வாக்களித்து இன்று கண்ட பலன்தான் என்ன?

மலையகம், மலையகம் என்று கூக்குரலிடுபவர்கள் எத்தனையோ பேர் வெட்டிச் சோற்றை தின்று உடல் வளர்ப்பவர்களாகவே காணப்படுகிறார்களே ஒழிய நல்ல முயற்சிகள் ஒன்றையும் காணோம்.

மலையக மாணவர்களை ஊக்குவிக்க நல்ல முயற்சிகளை நாம் தருகிறோம். தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நல்ல பல இளைஞர்களால் கல்வியைப் போதிப்போம் சோஷலிஸ பாதையில் இந்த மலையகத்தையும் அங்கம் வகிக்க செய்வோம். படித்த மலையக இளைஞர்களை ஒன்று திரட்டி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்று மேடைக்கு மேடை கூறினார் சிவலிங்கம், இன்று நடப்பதென்ன? அது மட்டுமல்ல போடுங்கள் உங்கள் வாக்கை கைச் சின்னத்துக்கு என்றார். அதே கைக்கு வாக்கு கொடுத்தோர்களே, அதே கையால் அடி படுகின்றனர்.

மலையகம் என்று கூறும், இந்த சிவலிங்கம் கினிகத்தேனை பக்கம் வந்தாரா? வந்திருப்பார், வந்திருந்தாலும் கினிகத்தேனையில் வாழும் தமிழ் மக்களின் நிலைமையைப் பற்றி கேள்விப்பட்டிருப்பாரா? அதுதான் இல்லை கடந்த மாதத்தில் தொடர்ந்தாற்போல் ஒரு வாரமாக கினிகத்தேனை தமிழ்ப் பாடசாலை மூடப்பட்டிருந்ததே? காரணத்தை அவர் கூறுவாரா! நீங்கள் கூறவேண்டாம் நானே கூறுகிறேன்.

பெப்ரவரி மாதத்தில் இடமாற்றத்தினால் இப்பாடசாலையில் சேவை செய்த இரு ஆசிரியர்கள் சென்றதை தொடர்ந்து ஒரே

**இரா. ஜெயா**
**(கினிகத்தனை)**

ஆசிரியரால் நிர்வகிக்கப்பட்டது, அவர் ஒருவரே நிர்வகித்ததின் காரணத்தினாலோ என்னவோ அவரும் சுகவீனம் ஏற்பட்டு பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. அந்த வாரமே அவருக்கு கொண்டாட்டம், மாணவர்களுக்கு திண்டாட்டம் அதன் பின்னர் 10 தினங்களுக்குப் பின்னரே இப்பாடசாலைக்கு ஒரு புதிய ஆசிரியர் நியமனம் பெற்றார். இப்படி பின்னேக்கி சென்றுகொண்டிருக்கும் மலையகத்தில் என்னத்தை சாதித்தீர்கள் என்று கூறமுடியுமா எட்டப்பா சிவலிங்கத்தினால்? அவருக்கு கூறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காளத்தில் நடைபெறும் இனக்கொலைக்கு

## இலங்கை அரசும் ஆதரவா?

## இல்லாவிடின் இலங்கையூடாக பாகிஸ்தான் விமானங்களை ஏன் அனுமதிக்கிறீர்கள்?

### மூதவையில் திருச்செல்வம் கியூ. சி. கண்டனம்!

வங்காளத்திலிருந்து வந்த விஜயன் என்ற அரச குமாரனின் வழித்தோன்றல்களே சிங்கள மக்கள் என்று மகாவம்சம் கூறுகிறது. சிங்கள தேசம் உருவாவதற்கு ஆதிகாரணம் வங்கத்து இளவரசன் விஜயனே; இத்தகைய பாரம்பரியத் தொடர்புள்ள வங்க தேசத்தில் இன்று நடைபெறும் படுகொலைகளையிட்டு இலங்கை ஏன் மௌனம் சாதிக்கிறது என்பது புரியவில்லை.

''கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களை யிட்டு உலகமே கவலை கொண்டுள்ளது. இந்தச் சம்பவங்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் நிலை என்ன என்பதை உலகம் அறிந்துகொள்ள விரும்புகிறது.

நிராயுதபாணிகளான கிழக்குப் பாகிஸ்தான் மக்களைக் கொன்று குவிப்பதற்காக இலங்கை மூலமாகப் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து சாதாரண உடைகளில் விமானங்கள் மார்க்கமாக கிழக்குப் பாகிஸ்தானுக்குத் துருப்புகள் கொண்டு செல்லப்படுவதாகக் கூறப் படுகிறது.

கட்டுநாயகாவிலிருந்து சிவிலியன் உடையில் மேற்குப் பாகிஸ்தான் ஜெனரல் ஒருவரும் அட்மிரல் ஒருவரும் போனதாகப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன: படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

எனவே இலங்கை மூலமாக கிழக்குப் பாகிஸ்தானுக்கு மேற்குப் பாகிஸ்தான் விமானங்கள், கப்பல்கள் செல்வதை முற்றாகத் தடைசெய்யுமாறு நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிழக்குப் பாகிஸ்தானில் மக்கள் முற்றாக அழித்து ஒழிக்கப்படுகின்றார்கள். அங்கு இனக் கொலை நடைபெறுகிறது.

கிழக்குப் பாகிஸ்தான் நகரங்கள் மீது விமானங்கள் குண்டு வீசியுள்ளதாகவும், நிராயுதபாணிகளான குடிமக்கள் மீது ரொக்கட், பீரங்கிகள், டாங்கிகளால் தாக்குதல் நடத்தப்பட்டு மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

டாக்கா பல்கலைக்கழகம் பீரங்கிகளாலும் டாங்கிகளாலும் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்டுள்ளது. அங்கிருந்த மாணவர்களும் பேராசிரியர்களும் கொல்லப் பட்டுள்ளனர். எனவே இவ் விடயத்தில் இலங்கை மௌனம் சாதிக்கக் கூடாது.''

---

பெரிய
வெள்ளிக்கிழமை
சிறப்புக் கட்டுரை

# சாதியை எதிர்த்து சிலுவையில் மாண்டார் இயேசுநாதர்

## அவரைப் பின்பற்றுவோர் சாதிவெறிக்குள் வீழலாமா?

**ஆசீர்வாதம் ஹென்றி ஜே. பி.**
**உபதலைவர்: சுன்னாகம் ப. ச.**

மானிடரின் இரட்சணியத்துக்காக மத்தியகிழக்கில் மந்தைக் கூட்டத்தின் மத்தியில் மசபியேல் குகையில் தோன்றிய மாவீரன் யேசு தன் இறுதி மூச்சுவரை தான் கொண்ட கொள்கைக்காக தன்நிகரில்லா இலட்சியத்துக்காக இன்னல்கள் பல ஏற்று வசைச் சொற்கள் பல தாங்கி வடுக்கள் பல பட்டு அநீதியும் அக்கிரமமும் தலைவிரிகோலமாக தாண்டவம் ஆடிய இருள் சூழ்ந்த உலகில் உண்மை ஒளியையும் உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டி மக்களுக்கு தெளிவு படுத்தினார்.

உலக வரலாற்றிலே ஒரே ஒரு பொதுப் பிரச்சினை தீண்டாமை. சனநாயக நாடுகளிலும் சரி, சர்வாதிகார நாடுகளிலும் சரி, இல்லை கொம்யூனிஷம் பேசும் சோசலிச நாடுகளிலும் சரி அன்றுதொட்டு இன்றுவரை புது மெருகுடனும் புதுப் பொலிவுடனும் வாழ்ந்து வரும் தீண்டாமைப்பேயை மக்கள் மத்தியிலிருந்து துரத்தி அடிக்க வேண்டும். என்று கங்கணங்கட்டி இராச வம்சத்தில் தாவீது கோத்திரத்தில் அன்னை மரி மகனாய் தோன்றிய யேசு தீண்டாச் சாதியாரான சமாரித்தரையும், ஆயக்காரரையும் அதிகம் நேசித்து அவர்கள் இல்லங்களில் அவர்களுடன் உணவருந்தி சமபந்தி போசனத்தை ஏற்படுத்தி அதன்மூலம் உண்மையான சமதர்ம மனித சமுதாயத்தை காணமுடியும் என்று உணர்ந்து உலகில் சமபந்தி போசனத்தை ஏற்படுத்திய முதல் மனிதனுகும்.

தீண்டாச் சாதிகளின் வீட்டில் உணவருந்திய யேசுவை எமது வீடுகளில் ஏற்றுக் கொள்ளக்கூடாது, அவனுக்கு எமது ஆசனங்களை வழங்கக் கூடாது என்று தனது உறவினர்களாலும் யூத மதத் தலைவர்களாலும் உயர்சாதி மக்களான பரிசேயர்களாலும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட யேசு சாதிகாரணமாக தன் சகோதரனைப் பகைக்கும் கொடிய தன்மையை கண்டு மனம் கொள்ளா வேதனையால் தன்னந்தனியாக நாற்பது (40) நாள் இரவும் பகலும் உண்ணாவிரதம் இருந்து தவம் செய்து பிதாவே நீர் படைத்த மனிதன் தனக்குள் உயர்வு தாழ்வு பார்த்து சாதி வித்தியாசங் காரணமாக தன் உடன் சகோதரனைப் பகைத்து உலகத்துக்கும் பிசாசுக்கும் அடிமையாகி கெட்டழிந்து நித்திய நரக ஆக்கினைக்கு உள்ளாகப்போகிறானே இவனால் உமக்கும் உலகத்துக்கும் என்ன நன்மை என்று கடும் தவம் இருந்தார்.

சாதிக்கொரு பக்கம் என பிரிக்கப்பட்ட யூத மத ஆலயங்களில் சமத்துவத்தை நிலைநாட்டினால் எமது புனித மதத்தின் ஆலயங்களில் மாசு படிந்து விடுமே தாழ்த்தப்பட்ட ஆயக்காரர்களும், சமாரித்தர்களும் எம்மையும் எமது மத பீடங்களையும் மதிக்கமாட்டார்களே —இதனால் நாட்டில் வர இருக்கும் நெருக்கடிகளும், அபாயங்களும் மிகவும் பெரிதாக இருக்கும்—ஆகவே இவனைக் கொலை செய்ய வேண்டும். இவன் மீது பாரதூரமான பழிகளை சுமத்தி இவனை கொலைத் தீர்வைக்கு உள்ளாக்க வேண்டும் என்று யூத மதத் தலைவர்கள் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டி அரசனுக்கும், மதத்துக்கும் எதிராக நாட்டில் பெரும் புரட்சி செய்ய மக்களை தூண்டி திட்டம் தீட்டினான் என்று எரோது அரசன் முன் முறையிட்டார்கள்; யேசுவைப் பிடிக்க வேண்டும் அதற்கு உதவி செய்பவர்களுக்கு சன்மானம்—வெகுமதி கொடுக்க வேண்டுமென்று அதற்குரிய பணமும் ஒதுக்கினார்கள்.

சாதிவெறிபிடித்த பரிசேயர்களுக்கும் கோவில் மூப்பர்களுக்கும் கைக் கூலியாக கன்னத்தில் முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்க யூதாஸ் கரியோத் என்னும் யேசுவின் சீடன் ஆயுதமாக்கப் பட்டான்.

தீண்டாமைப் பேய் சிலுவை ரூபத்தில் தோன்றி யேசுவின் தோளில் கல்வாரி மலைக்கு உல்லாசச் சவாரி செய்தது. இறுதியில் எதிர்கால உலகுக்கும் கடும் எச்சரிக்கையாக சிலுவை மரணம் கடும் தண்டனையாக்கப் பட்டு யேசுவின் சமதர்மக் கொள்கை மண்ணோடு மண்ணாக்கப்பட்டது: எதிர்கால சமதர்ம சீர்திருத்தவாதிகளுக்கும் இலட்சியவாதிகளுக்கும் சவால் விடப்பட்டது.

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை; மாண்ட புனுவே மகுடம் களற்று; என்று வீரகேடயம் தாங்கி வெற்றி வீரனாக ஜெயசீலனாக மரித்த மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து தன்னை கொலை செய்தவர்களுக்கும் செய்வித்தவர்களுக்கும் முன் தோன்றி எதிர் சவால் விட்டு நாப்பது (40) நாள் உலகில் வாழ்ந்து பரலோகத்துக்கு எழுந்தருளிய யேசுவின் பிள்ளைகள் என்றும் சீடர்கள் என்றும் உலகுக்கு தம்மைப் பறை சாற்றுபவர்கள் இன்று யேசுவின் போதனைப்படி சாதனைப்படி தீண்டாமையை ஒழிக்கிறார்களா? கல்வாரியில் யேசு சிந்திய இரத்தம் வீண் ஆக்கப்பட்டதா? அல்லது சாதிபார்த்து உலகுக்கும் பிசாசுக்கும் அடிமையாக்கி யேசுவை கொலை செய்கிறார்களா?

---

# ஒரு தனித் தமிழ் நாட்டை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்திருக்கலாம்: ஆனால், நாங்கள் இரண்டு வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்களாக இருப்பதனாலும், வேறுபட்ட இரண்டு இனங்களைச் சேர்ந்தவர்களாக நாங்கள் இருப்பதனாலும், இந்த வேற்றுமை இயல்பாகவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்பதை நாங்கள் உணரவேண்டும். இந்த வேற்றுமையினூடாகவே ஒற்றுமை காண நாம் முயலவேண்டும். நாம் முன்னேற வேண்டுமாயின் வேற்றுமையில் ஒற்றுமை கண்டிடவேண்டும்.

சிங்களத்துக்கு தரப்படும் அதே உரிமையும் மரியாதையும் தமிழ் மொழிக்கும் இடைக்கக்கூடியதாக-எல்லா மதங்களுக்கும் ஒரேவித அந்தஸ்து கிடைக்கக்கூடியதாக-எல்லா இனங்களுக்கும் மொழிகளுக்கும் சமத்துவம் கிடைக்கக்கூடியதாக - இந்த ஒற்றுமையை நாம் உருவாக்கவேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் முயற்சியில் வெற்றி பெற்ற நாடுகளில் சோவியத் யூனியன் தகுந்த உதாரணமாகத் திகழுகிறது. சமஷ்டியரசியலமைப்பின் கீழ்தான் இந்த வேற்றுமையில் ஒற்றுமை உலகத்தில் பல நாடுகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது; இலங்கையைப் பிரிப்பதற்கு அல்ல-வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்குதற்கே இலங்கைத் தமிழரசுக்கட்சி சமஷ்டியரசிலமைப் பினைக் கோருகிறது.

நீங்கள் அரசியற்காரணங்களுக்காக இப்போதைக்கு சமஷ்டியை ஏற்காமலிருக்கலாம். நீங்கள் இது நாள் வரை செய்து வந்த பிரசாரத்தின் காரணமாக சமஷ்டியை ஏற்பது அரசியல் ரீதியாக உங்களுக்கு கஷ்டமாக இருக்கலாம். ஆனால் இறுதியாக என்றோ ஒரு நாள், இலங்கை ஒரு சமஷ்டிநாடாக மாறியே தீரும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கையிருக்கிறது; ஆனால் நீங்கள் மனச்சாட்சியின்படி நடவுங்கள். சமஷ்டி நாட்டுப்பிரிவினையென்று நாட்டு மக்களுக்கு உண்மைக்கு முரணாக கூறுதீர்கள் என்று அரசாங்கக் கட்சியினரையும் யூ. என். பி.யினரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சோவியத் நாட்டின் சமஷ்டியமைப்பு சோவியத் நாட்டை கூறுபோடவில்லை; யூகோ நாட்டு சமஷ்டி அமைப்பு யூகோவைக் கூறு போடவில்லை; சுவிட்சர்லாந்தின் சமஷ்டியமைப்பு சுவிட்சலாந்தைப் பிளந்துவிடவில்லை. இது வரலாற்று உண்மையாகும்: உண்மை இப்படியிருந்தும், சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களிடம் சென்று தமிழரசுக்கட்சி நாட்டைக் கூறுபோடப் போவதாக அபத்தமான பிரசாரம் செய்து மக்களைத் தவறான சிந்தனையில் திருப்புகிறார்கள். உண்மையைக் கூறுங்கள். சமஷ்டி நாட்டைப் பிரிக்காது என்று சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறுங்கள் [illegible]

# தி. மு. கழகம்...

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

கிறேன். தமிழ் நாட்டின் நலனுக்காக, டெல்லியில் உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்.

இந்தி ஆதிக்கம் எந்தமுறையில் வந்தாலும் அது நேரடியாக வந்தாலும் சரி மறைமுகமாக வந்தாலும் சரி அதை எதிர்க்க தமிழகம் தயங்காது: அந்த இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிற தளபதியாக நின்று ஆதிக்கம் அழியப் பாடுபடும் சக்தியாக தி. மு. கழகம் விளங்கும்.

## எண்ணங்கள் நிறைவேற வேண்டும்

தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; தமிழர்களின் எண்ணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்!

இந்திய ஒருமைப்பாட்டில் அழுத்தம் திருத்தமான நம்பிக்கை உள்ளவர்கள் நாம். இந்திய ஒற்றுமை குலையக் கூடாது என்று கருதுவதில் யாருக்கும் சளைத்தவர்களல்லர் நாங்கள்! இந்திய ஒற்றுமைக்கு ஊனம் விளைய வேண்டும் என எண்ணியதில்லை; எண்ணப்போவதுமில்லை!

ஆனாலும் தமிழர்களில் உரிமைகளுக்கு உலைவைக்கப்படுமானால் தமிழ்மொழி அழிவிற்கு ஏதாவது அடையாளம் தெரியுமானால் உடனடியாக கழகம் துள்ளி எழும். அப்படிப்பட்ட நேரத்தில் இந்தப் பதவிகள் பறிபோகுமானால் இந்தப் பதவிகளை உதறி எறிந்துவிட்டு கழகம் போர்க்களத்தில் குதிக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக் கொள்கை எம் உயிரோடு கலந்தது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இரத்தினம்:— நாங்கள் நெஞ்சைத் தொட்டுத்தான் சொல்கின்றோம். ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் 1970 இலே பட்டிருப்புத் தொகுதியிலே என்ன பேசினார்? தமிழரசுக்கட்சித் தலைவரைத் தோற்கடியுங்கள் என்று கேட்டுக்கொண்டார். இந்த உண்மை உங்களுக்குத் தெரியவில்லை: பட்டிருப்பிலே திருவாளர் தம்பிராசா ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வென்றிருக்கிறார்.

கௌரவ கே. பி. ரத்னுயக்க:— இதெல்லாம் Divorce ஆன பிறகு நடந்தவை.

திரு இரத்தினம்: — நாங்கள் உங்களோடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோடும் Divorce செய்திருக்கிறோம். நாங்கள் சேருவதும், இணைந்து கொள்வதும், இணைந்த பின் பிரிவதும்தான் இந்த வரலாறு, இந்தவரலாற்றிலே உந்தப்பட்டுத்தான் — இந்த துன்பத்தை அனுபவித்துத்தான், இந்தப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சியினர் எங்களைத் தங்கள் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏன் என்பதை அறிந்துதான் உங்களுடைய கட்சியென்ன? சரித்திர வரலாற்றிலே நடந்தது என்ன? நான் உங்களைக் குறைசொல்லவில்லை.

### தமிழர்கள் பகடைக் காய்களா!

ஐக்கிய தேசியக் கட்சி ஏன் எங்களுக்கு உரிமையைத் தரவில்லை? அவர்கள் உங்களுக்குப் பயந்து கொண்டிருந்தார்கள். நீங்கள் ஏன் எங்கள் உரிமையைத் தரவில்லை? நீங்கள் அவர்களுக்குப் பயந்தீர்கள். இரண்டே இரண்டு காரணங்களை வைத்துக்கொண்டுதான் நீங்கள் இந்த நாட்டிலே அரசியற் போராட்டத்தை நடத்தியிருக்கிறீர்கள்; எங்களுக்கு மாவட்ட சபையைத் தருவோம் என்று நீங்கள் சொன்னீர்கள். உடனே கண்டிக்கு யாத்திரை செய்தார்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். பிறகு, அவர்கள் தருகிறோம் என்றார்கள். நீங்கள் அதை எதிர்த்தீர்கள். எனவே மாவட்ட சபையைத் தருவதை உங்கள் இரண்டு கட்சிகளுமே எதிர்த்திருக்கின்றன. இந்த நாட்டிலே நீங்கள் தேர்தலிலே வெற்றிபெற என்ன செய்தீர்கள்? இது சரித்திரம் கூறும் உண்மை. மாவட்டசபைகள் தருவதை எதிர்ப்பதுதான் தேர்தலிலே வெல்லுவதற்குரிய வழி. எங்களுக்கு மொழி உரிமை தருவதை எதிர்ப்பது நீங்கள் கொள்ளுகின்ற வழி. இந்த எதிர்மறைவழியிலே தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக வைத்து உங்களுடைய தேர்தலை நடத்தவேண்டாம்.

எங்களுக்கு உரிமை தருகின்ற கட்சிகளோடு நாங்கள் தோளோடு தோள் நின்று அவர்களின் வெற்றிக்காகப் போராடுவோம். எங்களுக்கு உரிமையைத் தந்தால் நாங்கள் அவர்களுக்காக எப்பொழுதும் போராடுவோம். மொழிப் பிரச்சினையை வைத்து மாவட்ட சபைப் பிரச்சினையை வைத்து-உரிமைகள் வழங்குவதை வைத்து உங்களின் எதிர்க் கட்சியை விழுத்துவதற்கு இனிமேலாவது முயற்சி செய்யாமல் இருப்பீர்களானால் தமிழ் மக்கள் உங்களுடைய பெரும்பான்மையின மக்களின் கட்சிகளிலே நம்பிக்கை கொள்வார்கள். இந்தச் சூழ்நிலையை நீங்கள் மறுக்கக்கூடாது. இதுதான் எங்களுக்கு வேதனையைத் தருகின்ற சூழ்நிலை. சிறுபான்மை இனம் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் ஒத்துழைத்தோம். எங்களைப் பொறுத்தவரையிலே ஐக்கிய தேசியக் கட்சியோடு எந்தவிதமான கொள்கை உடன்படிக்கையும் இல்லை.

உடுவில் பிரதிநிதி கனம் வி. தர்மலிங்கம் ருஷ்யாவில் நடப்பதையெல்லாம் குறிப்பிட்டார். நானும் ருஷ்யாவுக்குப் போனவன்தான்; என்னுடைய தமிழைக் கேட்பதற்காக லெனின் கிராட்டிலே, யிருந்து தமிழ் படித்த ஒருவர் வந்திருந்தார். நீங்கள் பேசும் தமிழை நான் கேட்க விரும்புகிறேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். அங்கே மொழி உரிமை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். ருஷ்யாவிலே ருஷ்ய மொழியை எல்லோரும் படிக்கிறார்களென்று கலவானப் பிரதிநிதி அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொருமாகாணத்திலும்தாய் மொழியே ஆட்சிமொழியாக இருக்கிறது. நீங்கள் யாழ்ப்பாணத்திலே, மட்டக்களப்பிலே என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள். உங்களுக்குத் தாய்மொழி ஒன்றிருக்கிறது. அதை வரவேற்கிறோம்: நீங்கள் தாய்மொழிப் பற்றோடு இருக்கிறீர்கள்; அதை நாம் வரவேற்கிறோம்: உங்கள் தாய் மொழி—சிங்கள மொழி — நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் சிங்கள மக்களின் வாழ்வின் துறை அனைத்திலும் முதலிடம் பெறச் செய்யுங்கள். அதை வரவேற்கிறோம். அந்த உரிமையை எங்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

### சோசலிசத்தின் மொழிச் சமத்துவம்!

சோவியத் ரஷ்யாவில் மொழி உரிமை எப்படிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது? அங்கே மொழி உரிமை எப்படிப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி கௌரவ உடுவில் பிரதிநிதி (திரு: வி. தருமலிங்கம்) அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் என்று கூட இங்கு சொன்னார்கள்: இலங்கையில் உள்ள சோவியத் ஸ்தானீகர் மாண்புமிகு றஃபீக் நிஷனேவ், 1970ஆம் ஆண்டு 1283 இலக்கம் கொண்ட சோவியத் நாடு என்ற பத்திரிகையில் மொழிச் சமத்துவம் எப்படி சோவியத் நாட்டில் இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லுகிறார்: அதை நான் இங்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன்;

அங்கே இருப்பது போன்று நீங்களும் செய்தால் நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நின்று உழைக்க ஆயத்தமாக இருக்கிறோம். அவர் சோவியத் நாடு பத்திரிகையில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்.

'எந்தத் தேசத்திற்கும் எந்த ஒரு மொழிக்கும் எத்தகைய தனிச் சலுகையும் அளிக்க முடியாது. தேசிய சிறுபான்மையினர் பால் அணுவளவும் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப் படுவதையோ அவர்களுக்குச் சிறிதும் அநீதி இழைக்கப்படுவதையோ அனுமதிக்கமுடியாது. மார்க்சிஸ்டுகளின் தேசிய இனத் திட்டம் முதலாவதாகத் தேசங்கள் மொழிகளின் சமத்துவத்தை ஆதரிக்க வேண்டும். இவ்வகையில் எந்தவித தனிச் சலுகையும் அனுமதிக்கக்கூடாது.

இன்னும் ஒன்று; அதாவது:

'இது சம்பந்தமாக வி. ஐ. லெனின் இவ்வாறு எழுதினார்; 'ரஷ்யாவைச் சேர்ந்த ஒவ்வொரு பிரசையும் மாபெரும் ரஷ்ய மொழியைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆனால் ஒன்றைமட்டும் விரும்பவில்லை. அதாவது இதில் துளியும் நிர்ப்பந்தம் கூடாது.'

துளியும் நிர்ப்பந்தம் கூடாது என்று அவர்கள் அங்கே கொள்கையை வகுத்திருக்கிறார்கள். நீங்கள் சிங்கள ஆசிரியர்களை அனுப்புகிறோம் என்று சொல்லுகிறீர்கள். நாங்கள் சொல்லுகிறோம் தமிழ் மக்களுடைய தமிழ் மொழி உரிமையை முதலில் தாருங்கள்; அதற்குப் பிறகு சிங்களத்தைப் படிக்கிறதைப்பற்றி நாங்கள் சிந்திப்போம் என்று!

### வள்ளுவர் காட்டிய சமத்துவ வாழ்வு

எங்களுக்கு இந்த நாட்டிலே சமத்துவம் வேண்டும் என்றுதான் கேட்கிறோம்; இன்றைக்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே சமத்துவம்பற்றி ஒருவர் கூறியிருக்கிறார். அவரது நூல் ருஷிய மொழியிலே மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. சிங்களத்திலே மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. திருக்குறள் தான் அந்த நூல். 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே சமத்துவமாக வாழ வேண்டும் என்ற கருத்தைப் பரப்பிய திருக்குறள் என்ற நூலை உடையவர்கள் நாங்கள். எங்களுடைய வேதனை காரணமாகச் சில வேளைகளிலே சமத்துவக் கொள்கைக்கு மாறாகச் செயல்பட்டாலும்கூட, உண்மையில் நாங்கள் அதற்கு மாறானவர்கள் அல்ல. இந்த நாட்டிலே வாழுகின்ற பல்வேறு இனமக்களுக்கு உரிமையிருந்தால் தான் ஒற்றுமை இருந்தால் தான் நாடு செம்மையாக இருக்கும்.

---

# தமிழினம் இந்நாட்டின் சிறுபான்மை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றால், தமிழினம் வேறாகவும் சிங்கள இனம் வேறாகவும் பிரிந்து வாழாமல் இந்தக் கருத்திலே தொடர்ந்தும் வாழவேண்டும் என்றால், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஓரினம், ஒரு மக்கள் என்று வாழவேண்டுமென்றால் இந்த ஒரேயொரு அடிப்படையில்தான் நாம் வாழ முடியாது;

இதுவரைகாலமும் வெள்ளையர் எங்களுக்குக் கற்பித்த இந்த ஒற்றையாட்சி திட்டத்திலே தமிழ் மக்களைப் புகுத்தி அவர்களை அடக்கி ஆளலாம், வாக்குப் பலத்தால் ஆளலாம், வாக்கை மீறிய பொழுது படைப்பலத்தால் ஆளலாம் என்று சிந்திப்பது ஜனநாயகம் அல்ல; பஞ்சசீலமும் அல்ல; அது ஒரு வெறும் பச்சை ஆக்கிரமிப்பு என்பதைச் சிங்கள மக்கள் விளங்கிக் கொண்டால் இந்த நாடு உருப்படும். அவர்களுடைய மூலாதாரமான நல்லெண்ணம், மூலாதாரமான சிந்தனை இந்தக் கருத்தை ஏற்கும் என்று நம்புகின்றேன்.

### அஹிம்சையே நல்வழி

நமது கட்சி ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் நாம் எந்த இயக்கத்தை நடத்தினாலும் அதனை அகிம்சையின் அடிப்படையில்தான் நடத்தினோம். கடந்த இருபது வருடகாலமாக அதனையே எங்கள் மக்களுக்கும் போதித்து வந்திருக்கின்றோம். புத்தபிரானும், யேசுக் கிறிஸ்துவும், காந்தி மகாத்மாவும் இதனையே எங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்தக் தத்துவங்களை மேல்நாட்டவர்களும் உலகம் முழுவதும் ஆராய்ந்து சத்தியமும அகிம்சையும் என்ற அடிப்படையிலே செயலாற்றுகிற இப்பொழுது, சத்தியத்தைப் பற்றி நாங்கள் கருத்துவேற்றுமை கொள்ளலாம். அதாவது, எது சரி, எது பிழை என்பதைப் பற்றி நாங்கள் கருத்துவேற்றுமை கொள்ளலாம். ஆனால், அகிம்சை எது என்பதைப்பற்றிக் கருத்து வேற்றுமை இல்லாது. ஆகவே, சத்தியத்திலும் பார்க்க அகிம்சை ஒரு உயர்வான, சிறந்த வழி என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். பௌத்த மக்கள் இதை நன்கு அறிந்திருக்கிறார்கள்;

### புத்தர் கூறியதென்ன?

ஒரு நாள் புத்தபகவான் செய்யத்துணிந்த தியாகத்திலிருந்து பௌத்த மக்கள் இதனை நன்கு விளங்கிக் கொள்வார்கள். ஆடுவெட்ட நினைக்கின்ற ஒரு கொடிய மனம் உடையவனை புத்தபிரான் பார்த்துச் சொன்னார், "நீ ஆட்டைவெட்டிப் புண்ணியம் கிடைக்கும் என்று நினைத்தால், அதற்குப் பதிலாக ஒரு மனிதனை வெட்டினால் எவ்வளவு புண்ணியம் கிடைக்கும்; என்னை வெட்டி அந்தப் புண்ணியத்தை எடுத்துக்கொள்." இவ்வாறு புத்தபிரான் அவனுக்குச் சொன்ன அந்த அகிம்சைப் போதனையினாலே அவன் மனம் மாறினான். ஆகவே எங்களுக்கு சிங்கள மக்களிலே—அவர்களுடைய அடிப்படை நல்லெண்ணத்திலே—அவர்களுடைய ஆத்மீக தர்ம உணர்விலே— நிறைந்த நம்பிக்கையிருப்பதாலேயே நாங்கள் அகிம்சைப் பாதையிலே சென்று எங்களுடைய உரிமைகளைப் பெறலாம் என்று நினைக்கின்றோம்.

### தியாகராசாவின் கூற்று

வட்டுக்கோட்டைப் பிரதிநிதியவர்கள் உங்களிடம் மறைத்து வைத்த ஒரு கருத்தை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லலாம். அதைப்பற்றி எனது நண்பர் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி (திரு. இரத்தினம்) அவர்களும் சொன்னார். வட்டுக்கோட்டை பிரதிநிதியவர்கள், அவர் எழுதிய புத்தகத்திலே "இந்த நாட்டிலே ஒற்றையாட்சி தமிழ் மக்களுக்கு மிகவும் கொடூரமானது; ஒற்றையாட்சியிலே எங்களுக்கு ஒரு உரிமையும் கிடையாது; சமஷ்டி ஆட்சியிலும் கூட ஒரு உரிமையும் எங்களுக்கு நிறை[illegible]

[illegible] வேண்டு மென்று" கூறி, படம் போட்டு 1956ஆம் ஆண்டு தொடக்கமே சொல்லி வருகின்றார்; நாட்டைப் பிரித்தால்தான் தமிழ் மக்களுடைய உரிமையைப் பெறலாம் என்று அவர் கொண்டிருந்த பழைய கருத்திலேயிருந்து வட்டுக்கோட்டைப் பிரதிநிதியவர்கள் மாறியிருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது; அதைப் பற்றி அவர் இக்கௌரவ சபையிலே இன்னும் எதுவும் கூறவில்லை. அன்று நாட்டைப் பிரிக்கவேண்டுமென்று கருத்துக்கொண்டிருந்த அவர் இன்று அரசாங்கத்தை ஆதரிக்கின்றார். இதை நான் ஏன் கூறுகிறேனென்றால், அவர் மாறிவிட்டாரென்று அவர் மேல் குற்றம் சுமத்துவதற்காக அல்ல. ஒவ்வொருவருக்கும் தமது சிந்தனையை மாற்றிக்கொள்ள உரிமை வேண்டும்.

### பிரிவினை எண்ணம் வளரும்

இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்கள் எங்களுடைய தலைமையிலே, சிங்கள மக்களுடன் இணைந்து, சேர்ந்து வாழ்வதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள். சுயநிர்ணய அடிப்படையிலே சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தைச் சிங்கள மக்கள் ஏற்காவிட்டால், இன்றைக்கு எங்களுடைய சந்ததியிலே, வருங்காலச் சந்ததியிலே எங்கள் நண்பர் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியவர்களின் கருத்துத்தான் வேரூன்றி வளர்ந்துவருகின்றது — வளர்ந்து வரும். சமஷ்டி அரசியல் கிடைக்காவிட்டால் நாட்டைப் பிரித்து தமிழர்கள் சொந்த நாட்டை ஆளவேண்டுமென்ற கருத்து இளம் சந்ததியினரின் மனதிலே வளர்ந்து கொண்டு வருகின்றது. அது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். சிங்கள மக்கள், இந்நாட்டிலேயுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளை—சுதந்திரமான உரிமைகளை—கொடுத்தாகவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்காக வாய்ப்புத் தந்த கௌரவ தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

---

## மலையகத்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யகத் தொழிற்சங்கங்கள் தான்.

சிங்களவர் தமது மொழியையும் இனத்தையும் காப்பாற்ற ஒரே அணியில் நிற்கிறார்கள்; ஆனால் தமிழராகிய நாம் கட்சிகளின் பேரால் பிரிந்து நிற்கிறோம்; தமிழையும் தமிழரையும் காக்க இப்போது போராடும் தமிழ் கட்சிகளோடு மலையகத்தின் மன்றங்கள் மற்றும் முற்போக்கு இயக்கங்கள் யாவும் இணைந்து செயல்படவேண்டும் அப்போது தான் எமது மொழியையும் இனத்தையும் இவ்வீழவள நாட்டில் என்றும் நிலைபெறச் செய்யமுடியும். மலையகமும் வடகிழக்கு மாநிலங்களும் அமைப்பால் வேறு தான் ஆனால் மொழியால்— இனத்தால் ஒன்று என்பதை நாம் மறக்கக்கூடாது.

---

## பல்கலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகம் நிறுவப்படும் என்று அழுத்தமாக கூறிவிட்டார் கல்வியமைச்சர்.


பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவே இன்னும் நிறுவப்படவில்லை; அது நிறுவப்பட்டு, அதன் பின்னர் அக்குழு முடிவு செய்தால் மட்டுமே தமிழ்ப் பகுதிக்குப் பல்கலைக் கழகம் கிடைக்கும்.

இந்நிலையில் பல்கலைக் கழகம் ஏதோ இப்போதே வட்க்கே வந்து விழுந்து விட்டதாக ஆளுங்கட்சி அடிவருடிகள் அடித்து வந்த பல்டி அம்பலமாகிவிட்டது; சாயம் வெழுத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது



டைரக்ஷன்:—ராமன்ணா

## கெப்பிட்டல் - பிளாஸா
## மைலன்

ரவிச்சந்திரன் ஜெயலலிதா அசோகன்
முத்துராமன் நாகேஷ் ஷீலா நடித்த

ராமன்ணாவின்

# மூன்றெழுத்து

**கிங்ஸ்லி** எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த **படகோட்டி**


---

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய வா ராஜா வா

2வது வாரமாக
செல்லமகால்
வின்சர் இம்பீரியல்
(யாழ்நகர்) (மட்டுநகர்)
—ஆகிய திரைகளில்—
காட்சிதருகிருன்

**வா ராஜா வா**

மாஸ்டர் பிரபாகர்
—திறம்பட நடித்த—



தமிழனின் கலைத்திறன் ஓங்கவைத்த மாமல்ல புரத்தில் படமாக்கிய

**வா ராஜா வா**

ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவர்களும் பெற்றோர் ஆசிரியர் பார்க்கவேண்டிய படம்

# வா ராஜா வா

(வண்ணப் படம்) திரைக்கதை—வசனம்—டைரக்ஷன் ஏ. பி. நாகராஜன்.

---

3வது ஜனத்திரள் நிறைந்த வாரமாக காட்சிதருகின்றுன்

செட்ன்ரல்
(மருதானை)
ராணி ஜோதி
(யாழ்நகர்) (திருமலை)
—ஆகிய திரைகளில்—
நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்

சிவாஜிகணேசன்
அளிக்கும்
அருண்பிரசாத் மூவீஸ்



சதன்
நம்பியார்
எஸ். என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)
(பாஸ்கள் யாவும் ரத்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் சித்திரை மாதம் 9-ம் [illegible] பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர்: கோவைமகேசன்